https://t.me/Free_eMagazine

16.08.2019
Vol: 35 Issue : 34
ரூ.20

வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!

பாலஜோதிடம்

எண்கள்

ஆசிரியர் : அதிர்ஷ்டம் சி.சுப்பிரமணியம்



ஏழு ஆண்டு கேது தசைக்கான எளிய பரிகாரம்!

காஞ்சிபுரத்தில் நின்றபடி அருள்பாலிக்கும் அத்திவரதர்!

12 ராசியினருக்கும் அதிர்ஷ்டத்தை வாரி வழங்கும் அற்புத நாட்கள்!

AVOID TO DOWNLOAD

FROM

userupload.net/in, proapk.net & urlweb.net

SPAM WEBSITES

அனைவரும் படித்துப் பயனடைய வேண்டிய ஆன்மிகம் மற்றும் ஜோதிட நூல்கள்



SP 76, 14- வது தெரு அம்பத்தூர் தொழிற்பேட்டை அம்பத்தூர் சென்னை - 600058.
போன் : 044 - 43993029 செல் : 9677081373



கேது தசை ஏழு ஆண்டுகள் நடக்கும். கேது தசையில் ராகு புக்தி நன்மை செய்யாது. ராகு மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் ஆகிய ஐந்து வீடுகளில் இருந்தாலும் கேது தசையில் கெடுபலன்களைத் தரும். சனிக்கிழமையன்று ராகு காலத்தில் பரிகாரம் செய்துகொள்ள வேண்டும். இனி, கேது தசையில் வரும் ஒன்பது புக்திகளுக்கான பொதுப்பலன்களைக் காண்போம்.

1. கேது தசையில் கேது புக்தி

இது மிகவும் கெடுதலான காலகட்டம். எச்சரிக்கையாக வாழவேண்டும். தனக்கு மிகவும் வேண்டியவர்களான மனைவி, மக்கள், சகோதரர்கள்மீது வெறுப்பு உண்டாகும். புரட்டாசி மாதத்தில் சிறைப்பட நேரலாம். அந்த புரட்டாசி மாதமானது ஆயுள் பாவ விஷயத்தில் முடிவு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி மாதமாக இருக்குமேயானால், அம்மாதத்தில் மிகவும் பீடை உண்டாகும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2. கேது தசையில் சுக்கிர புக்தி

மனைவியும், மக்கட்பேறும் அமைந்து மகிழ்வுண்டாகும். நினைத்த காரியமெல்லாம் கைகூடும். புக்தியின் முடிவில் தனக்கோ மனையாளுக்கோ நோய் உண்டாகி விலகும்.

t.me/Free_eMagazine

3. கேது தசையில் சூரிய புக்தி

இருக்கும் இடம்விட்டு வெளிநாடு சென்று பிறகு திரும்ப வரநேரும். உடல்வலி, ஜுரம், தலைநோய் உண்டாகும். மனதில் குழப்பம் தோன்றும். சூரியன் லக்னத்துக்கு 3, 6, 8, 12-ல் இருந்தாலும், சூரியன் பகை ஆகியிருந்தாலும் மேற்கண்ட பலன்கள் கடுமையாக இருக்கும். இந்த கடுமை மாறிட முப்பது நாட்களுக்கு பசு மாட்டிற்கு அகத்திக்கீரை கொடுத்துவர தோஷம் மாறும்.

4. கேது தசையில் சந்திர புக்தி

இந்த காலகட்டத்தில் வேறு பெண்கள்மூலம் வழக்கு, சண்டை உண்டாகும். புத்திரர்க்கு பீடை உண்டாகும். தீமைகள் வந்து விலகும். தங்க நகை, கன்று பசு சேர்க்கையுண்டு.

5. கேது தசையில் செவ்வாய் புக்தி



இந்த காலகட்டத்தில் இடையூறு, பயம் ஏற்படும். கூட்டம்கூடி சண்டையிடுதல், வழக்காடுதல், பற்பல விரோதம் உண்டாதல், எதிலும் தடை ஏற்படுதல், பெண்களால் கேடு. அதிக நெருப்பால் பயம் போன்றவை நடைபெறும். திருச்செந்தூர் சென்று முருகனை ஒருமுறையாவது தரிசித்தால் இதிலிருந்து மீண்டுவரலாம்.

6. கேது தசையில் ராகு புக்தி

இக்காலகட்டத்தில் விஷ பயம், பெண்களுக்குப் பீடை உண்டாகும். வீட்டுத் தலைவருக்கு கெடுதல் உண்டாகும். கீர்த்தி நிலைக்காது.

ஜோதிட சிகாமணி சிவ. சேதுபாண்டியன்

AUG16-RIL

தன்வந்திரி பீடத்தில் நவதுர்க்கா, அஷ்ட பைரவர் ஹோமத்துடன் நவசண்டி யாகம்!

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்கிய பீடத்தில் ஆவணி மாத அமாவாசையை முன்னிட்டு 28-8-2019 புதன்கிழமை முதல் 30-8-2019 வெள்ளிக்கிழமை வரை மூன்று நாட்கள் நவதுர்க்கா, அஷ்ட பைரவர் ஹோமத்துடன் நவசண்டி யாகம், விசேஷ ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

பில்லி, சூன்யம், செய்வினை, பொறாமை போன்றவற்றை அகற்றுவதற்கும், கோபத்தைக் குறைப்பதற்கும், ஜாதகரீதியிலான தோஷங்களைக் களைவதற்கும், மாத்ரு- பித்ரு தோஷம் அகலுவதற்கும், திருஷ்டி தோஷத்திலிருந்து மீள்வதற்கும் நவதுர்க்கைகளை வேண்டி நடைபெறும் ஹோமமே நவதுர்க்கா ஹோமமாகும்.

திசைக்கொருவராக விளங்கும் எட்டு பைரவர்கள் அஷ்ட பைரவர்கள் எனப்படுகிறார்கள். அவர்களைப் போற்றி வழிபடும் ஹோமமே அஷ்ட பைரவர் ஹோமம். இதில் பங்கேற்பதன்மூலம் அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெறலாம். வெளிநாட்டு வேலைகள் கைகூடும். பிரம்மஹத்தி தோஷம் அகலும். மரணபயம் விலகும்.

சக்தியின் மிக சக்திவாய்ந்த அம்சமே ஸ்ரீசண்டிகா தேவி. துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி சேர்ந்த உருவமாகும். கொடுமையான ஆட்சியினால் ஏற்படும் தீய சக்தியையும் தடைகளையும் அகற்றுவதற்காக நவசண்டி ஹோமத்தின்போது துர்க்கா சூக்தம், தேவி மகாத்மியம், நாராயணீயம், துர்க்கா கவசம், மஹிஷாசுரமர்த்தினி ஸ்லோகம் போன்ற பல்வேறு பாராயணங்களும் நடைபெறவுள்ளன.

மேலும் விவரங்களுக்கு:

ஸ்ரீதன்வந்திரி ஆரோக்கிய பீடம்,

அனந்தலை மதுரா, கீழ்புதுப்பேட்டை, வாலாஜாபேட்டை- 632 513.

வேலூர் மாவட்டம், தொலைபேசி: 04172- 230033, 230274. அலைபேசி: 94433 30203.

Email : danvantripeedam@gmail.com

t.me/Free_eMagazine

7. கேது தசையில் குரு புக்தி

பாதி லாபமும், அரசாங்கத்தால் நன்மையும், விஷ பயம் உண்டாகி விலகுதலும், லட்சுமியைப் போல் அழகு பொருந்திய மனையாள் சேர்க்கையும், அதிக செல்வமுண்டாதலும் நடைபெறும்.

8. கேது தசையில் சனி புக்தி

பல வகைகளில் பொருட்சேதமாகும். இடம் மாறுதல் ஏற்படும். சரீரத்தில் சொறி, சிரங்கு உண்டாகும். சந்திரன் போன்ற முகமுள்ள மனைவிக்கு நோயும், மனதில் குழப்பமும் உண்டாகி விலகும்.

9. கேது தசையில் புதன் புக்தி

இடம் மாற நேரும். தனது சுற்றத்தாரால் பயம் உண்டாகும். புத்திர சோகம், எண்ணிய காரியம் கைகூடாமை நடைபெறும். எனவே இந்த காலகட்டத்தில் அமைதிகாக்க வேண்டும்.

பரிகாரம்-1

கேது தசை, கேது புக்தியில் செய்வது நல்லது. தேங்காய்- 9, வாழைப்பழம்- 18, களிப்பாக்கு- 18, வெற்றிலை- 50 கிராம், கதம்பப் பூ- 9 முழம் ஆகியவற்றை செவ்வாய்க்கிழமையன்று எமகண்ட நேரத்தில் (காலை 9.00-10.30 மணிக்குள்) நவகிரக சந்நிதியில் கொடுத்து அர்ச்சனை செய்யவும். அர்ச்சனை செய்த பொருளை அங்கேயே கொடுத்துவிட்டு வரவும். அதற்கு முன்பு காலை 8.00-9.00 மணிக்குள் மூலவருக்கு அர்ச்சனைசெய்து, அர்ச்சனை செய்த பொருட்களை வீட்டிற்குக் கொண்டு வரலாம்.

பரிகாரம்-2

கேது தசையில் ராகு புக்தி நடப்பவர்கள் தேங்காய்- 9, வாழைப்பழம்- 18, களிப்பாக்கு- 18, வெற்றிலை- 50 கிராம், கதம்பப்பூ -9 முழம் ஆகியவற்றை சனிக்கிழமையன்று ராகு காலத்தில் காலை 9.00-10.30 மணிக்குள் நவகிரக சந்நிதியில் கொடுத்து அர்ச்சனை செய்யவும். அர்ச்சனை செய்த பொருளை அங்கேயே கொடுத்துவிட்டு வரவும். அதற்கு முன்பு காலை 8.00-9.00 மணிக்குள் மூலவருக்கு அர்ச்சனை செய்து, அர்ச்சனை செய்த பொருட்களை வீட்டிற்குக் கொண்டு வரலாம்.


செல்: 94871 68174

AUG16-RIL



ADVT

AUG16-RIL



11-8-2019 முதல் 17-8-2019 வரை

இந்த வார ராசிபலன்

			ராகு
	ஆடி 26 முதல் 32 வரை. வாக்கியப் பஞ்சாங்கப்படி		சூரியன் புதன் சுக்கிரன்
			செவ்வாய்
சந்திரன் சனி கேது	குரு		



மேஷம்
(அஸ்வினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)

மேஷ ராசிநாதன் செவ்வாய் 4-ல் இருந்து 5-ஆம் இடத்துக்கு மாறியிருக்கிறார். எந்தவொரு கிரகமும் திரிகோணத்திலும் கேந்திரத்திலும் இருப்பது சிறப்பான பலனைத் தரும். திரிகோணம் என்பது லட்சுமி ஸ்தானம்; அதை அதிர்ஷ்ட ஸ்தானம் என்று சொல்லலாம். கேந்திரம் என்பது விஷ்ணு ஸ்தானம்; முயற்சி திருவினையாக்கும் என்று சொல்லலாம். திரிகோணத்தில் ராசிநாதன் இருப்பதால் எல்லா முயற்சிகளும் சிரமப்படாமல் எளிதாக ஈடேறும். பூர்வபுண்ணிய பாக்கியாதிபதியும் திரிகோணாதிபதியுமான குரு 8-ல் மறைவது குற்றம் என்றாலும், ராசிநாதன் செவ்வாயின் பார்வையைப் பெறுவதாலும், அத்துடன் 10-க்குடைய சனி 9-ல் இருப்பதாலும் தர்மகர்மாதிபதி யோகம் ஏற்படுகிறது. எனவே செல்வாக்கு, புகழ், பெருமை, திறமைக்கேற்ற கௌரவம், மதிப்பு, மரியாதை எல்லாம் எதிர்பார்க்கலாம். மனக்கவலை மாறும். குடும்பக் குழப்பம் விலகும். வீட்டில் மங்கள காரியங்கள் நடைபெறும். விரயாதிபதி குரு விரயஸ்தானத்தைப் பார்ப்பதால் சுபவிரயங்கள் உண்டாகும்.

பரிகாரம்: வைத்தீஸ்வரன் கோவில் அல்லது பழனி அல்லது சென்னிமலை சென்று முருகனை வழிபடலாம். உள்ளூரில் செவ்வாய் கிரகத்துக்கு செவ்வரளி சாற்றி வழிபடவும்.

t.me/Free_eMagazine
AUG16-RIL



ரிஷபம்

(கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ஆம் பாதம் முடிய)

ரிஷப ராசிநாதன் சுக்கிரன் 3-ல் மறைந்தாலும் ஆடி 6 முதல் புரட்டாசி 3 வரை அஸ்தமனமாக இருப்பதால் டபுள் மைனஸ்=ப்ளஸ் என்பதுபோல, 'கெட்டவன் கெட்டிடில் ராஜயோகம்' என்பது பலித மாகும். மேலும் சுக்கிரனுக்கு மீனம் உச்ச ராசியாகும். மீனத்துக்கு அதிபதி குரு (உச்ச ராசிநாதன்) ரிஷப ராசியையும் பார்க்கிறார்; சுக்கிரனையும் பார்க்கிறார். சுக்கிரன் 6-க்குடையவர் என்பதால் நோய் நொடி, பிணி, வைத்தியச்செலவு எல்லாம் விலகும். ஆரோக்கியம் பெருகும். அதேபோல எத்தனை லட்சம் கடன் இருந்தாலும் அடைபடும் மார்க்கம் உண்டாகும். வியாபாரம் விருத் தியடையும். தொழில் முன்னேற்றமாகும். தாராளமான வரவு- செலவுகள் ஏற்படும். நீண்டநாள் கனவுகளும் திட்டங்களும் வெற்றியடையும். திருமணமாகாதவர் களுக்குத் திருமணம் கூடும். திருமணமான வர்களுக்கு மனைவிவகையில் அனுகூலமும் ஆதாயமும் எதிர்பார்க்கலாம். சில பெண் களுக்கு தகப்பனார்மூலம் அசையும் சொத்து, அசையாச் சொத்து கிடைக்கும் யோகம் உண்டாகும். 2-ல் ராகு; 8-ல் கேது. பேச்சில் நிதானம் தேவை.

பரிகாரம்: அட்டமத்துச்சனியின் வேகம் தணிய திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, எட்டியத்தளி, திருநறையூர் போன்ற தலங்கள் சென்று வழிபடலாம்.



மிதுனம்

(மிருகசீரிஷம் 3-ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)

மிதுன ராசியில் ராகு நிற்கிறார். 7-ல் சனி, கேது நின்று பார்க்கிறார்கள். 'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. அத்துடன் 'சந்தையில் விட்டெறிந்த செருப்பு யார் தலையிலாவது விழும்' என்பது விதி. ஆனால் அந்த செருப்புக்கு சனி பிடித்தவன் யார் என்பது தெரியுமாம். அவன் தலையில் விழும். ஆக சனி, ராகு- கேது இவர்களுடைய சம்பந்தம் உங்களைப் பாடாய்ப்படுத்துகிறது. குருவும் 6-ல் மறைகிறார்; பார்வையில்லை. எனவே உப்பு விற்கப்போனால் மழை பெய்யும். மாவு விற்கப் போனால் காற்றடிக்கும். வாழ்க்கையிலும் தொழில்துறையிலும் எந்த முயற்சியில் இறங்கினாலும் எல்லாம் கல்லிலே நார் உரிப்பதுபோல காணப்படும். கொண்டது கொடுத்தது வராமல் தடைப்படும். ரத்தபந்த சொந்தங்களிலும், நட்பு வட்டாரத்திலும் பொருளாதாரத்தால் வருத்தங்களை சந்திக்கும் நிலை ஏற்படும். குதிரை கொள் என்றால் வாய் திறக்கும்; கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்வதுபோல, உங்களிடம் பணம் வாங்கும்போது ஆயிரம் வணக்கம் கனிவாகப் பேசி வாங்கிப் போவார்கள். கொடுத்தைக் கேட்டால் பொங்கி எழுவார்கள்.

பரிகாரம்: திருவெண்காடு, மதுரை மீனாட்சியம்மன் கோவில், காஞ்சிபுரம் பச்சை வண்ணநாதர் கோவில் சென்று வழிபடவும்.



கடகம்

(புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

கடக ராசியில் சூரியன், புதன் சுக்கிரன் சேர்க்கை. இவர்களுக்கு 5-ல் உள்ள குரு பார்வை கிடைக்கிறது. அத்துடன் 10-க்குடைய செவ்வாய் 9-க்குடைய குருவைப் பார்ப்பது தர்மகர்மாதிபதி யோகம். எனவே இந்தவாரக் கதாநாயகன் நீங்கள்தான். ஆகவே தொட்டது துலங்கும்; விட்டது கிடைக்கும்; பட்டது துளிர்க்கும். ஏற்கெனவே தொழில்துறையில் நிலவிய சிக்கல்கள்

ஜோதிடபானு 'அதிர்ஷ்டம்' சி. சுப்பிரமணியம்
4-ஏ, நான்காவது கிழக்கு குறுக்குத் தெரு, (பிரியா நர்சரி பள்ளி அருகில்)
கிருஷ்ணாபுரம் காலனி, மதுரை-14. அலைபேசி: 99440 02365.

t.me/Free_eMagazine
AUG16-RJL

எல்லாம் நீங்கிவிடும். புதுமுயற்சிகள் முழு வெற்றியடையும். கூட்டுக் குடும்பங்களில் இருப்போருக்கு ரஜினி சொன்னதுபோல் 'உங்கள் வழி தனி வழி' ஆகும். உங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் எந்தத் தடையும் ஏற்படாது. ஆயிரம் கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை. அதுவே உங்களைச் சார்ந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் உறுத்தலாக இருக்கும். அதற்காக யார்மீதும் வருத்தப்படாதீர்கள். யாரையும் பகைத்துக்கொள்ளாதீர்கள். குர்-ஆனில், 'ஒவ்வொரு அரிசியிலும் அதை உண்ணுகிறவன் பெயர் எழுதியிருக்கிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாருக்கு எதுவென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அது கண்டிப்பாகக் கிடைக்கும்.

பரிகாரம்: திங்களூர், திருமாந்துறை, திருவிடைமருதூர் போன்ற தலங்களுக்குச் சென்று வழிபடவும்.

சந்திரன் மாறுதல்:
ஆரம்பம்- தனுசு.
13-8-2019- மகரம்.
15-8-2019- கும்பம்.

கிரக பாதசாரம்:
சூரியன்: ஆயில்யம்- 3, 4, மகம்- 1.
செவ்வாய்: மகம்- 1, 2.
புதன்: பூசம்- 3, 4, ஆயில்யம்- 1, 2, 3.
குரு: கேட்டை- 2.
சுக்கிரன்: ஆயில்யம்- 2, 3, 4, மகம்- 2.
சனி: பூராடம்- 1, மூலம்- 4.
ராகு: புனர்பூசம்- 1.
கேது: பூராடம்- 3.

கிரக மாற்றம்:
சுக்கிரன் அஸ்தமனம் (ஆடி- 6 முதல் புரட்டாசி- 3 வரை).
17-8-2019- சிம்மச் சுக்கிரன்.
17-8-2019 இரவு- சிம்ம சூரியன்.



சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய)

t.me/Free_eMagazine

சிம்ம ராசியில் ராஜயோகாதிபதியான செவ்வாய் நிற்கிறார். அதனால் ராசிநாதன் சூரியன் 12-ல் மறைந்த தோஷம் விலகும். 12-ல் சூரியன், புதன், சுக்கிரன் மூவரும் மறைகிறார்கள். புதன் 2, 11-க்குடையவர். சுக்கிரன் 3, 10-க்குடையவர். சூரியன் ராசி நாதன். கடும் உழைப்பு, அற்ப ஊதியம் என்ற வகையில் பலன் நடக்கும். எட்டு மணி நேரத்திற்கு பதில் பத்து மணி நேரம் 12 மணி நேரம் ஓவர் டைம் வேலை பார்த்தாலும், எட்டு மணி நேரச் சம்பளமே ஒழுங்காக வந்துசேராது. என்றாலும் 5-க்குடைய குருவை 9-க்குடைய செவ்வாய் பார்ப்பதால் (இரண்டு திரிகோணாதிபதிகள் சம்பந்தம்) உங்களுடைய அன்றாடத் தேவைகளுக்கும் சௌகரியங்களுக்கும் எந்த குறைவும் இல்லா தபடி எல்லாம் நிறைவாக அமையும். எந்த வொரு ஜாதகத்திலும் திரிகோணமும் கேந்திரமும் வலுவாக இருந்தால் அந்த ஜாதகம் யோகமான ஜாதகமாகும். 'சந்திர காவியம்' என்ற நூலில் 'அஞ்சு ஒன்பதிற்க திபர் பாபர் சுபரானாலும் பொன் போன்ற சுபமே பொழிவார்' என்று சொல்லப் பட்டுள்ளது. ஆகவே 'குறை ஒன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா' என்று மனநிறை வடையலாம்.

பரிகாரம்: சூரியனார்கோவில் சென்று வழிபடலாம். பருதியப்பர் கோவிலும் (தஞ்சை) போகலாம்.



கன்னி

(உத்திரம் 2-ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)

கன்னி ராசிநாதன் புதன் 11-ல் பலம் பெறுகிறார். வாரத் தொடக்கத்தில் சனியின் சாரம் பெற்றாலும் பிறகு சுயசாரத்தில் சஞ்சாரம். புதனின் நட்சத்திரமான கேட்டையில் நிற்கும் குரு புதனைப் பார்க்கிறார். எனவே, உங்கள் முயற்சிகள் அனைத்தும் முழு வெற்றியடையும். செய்தொழில் சிறப்படையும். வாழ்வு வளம் பெறும். தேகம் நலம் பெறும். பொருளாதாரத்தில் செல்வாக்கு பலம் பெறும். பணபலம், படைபலம், மனபலம் எல்லாம் தெளிவாக இருக்கும். 9-க்குடைய சுக்கிரனையும் 10-க்குடைய புதனையும்

AUG16-RIL



ADVT

AUG16-RIL

(ராசிநாதன்) குரு பார்க்கிறார். 8-க்குடைய செவ்வாய் 12-ல் மறைவதால் தேவையற்றவை சல்லடையில் வடிகட்டுவதுபோல தேங்கி விடும். பயனுள்ளவர்களின் அல்லது பல முடையவர்களின் தொடர்பு உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். 5, 6-க்குடைய சனி 4-ல் நின்று 10-ஆமிடத்தைப் பார்ப்பதால், எதிரிகளும் வேண்டாதவர்களும் சிலசமயம் உங்களுக்கு செய்யும் கெடுதல்களே நல்லதாக அமைந்துவிடும். ராமாயணத்தில் ராமனுக்குக் கெடுதல் செய்வதாக நினைத்து கைகேயியின் மூலமாக ராமனைக் காட்டுக்கு அனுப்பினாள் மந்தரை. அதுவே ராமாவதாரத்தின் குறிக்கோளை நிறைவேற்றியது. (இராவணனின் வதம்).

பரிகாரம்: திருவெண்காடு, மதுரை மீனாட்சியம்மன் கோவில் சென்று வழிபடவும்.

துலாம்

(சித்திரை 3-ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)



t.me/Free_eMagazine

துலா ராசிநாதன் சுக்கிரன் 10-ல் திக்பலம் பெறுகிறார். அவருக்கு சாரம் கொடுத்த புதனும் அவருடன் சேர்க்கை. 9-க்குடைய புதன் 10-ல் இருப்பது தர்மகர்மாதிபதி யோகம். எனவே எண்ணியது ஈடேறும். கருதியவை கைகூடும். நினைத்தவை நிறைவேறும். விரும்பியது தேடிவரும். வேண்டாதவை விலகிப் போகும். திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் கூடும். திருமணமானவர்களுக்கு வாரிசு உண்டாகும். மனைவி, மக்கள் பாக்கியம் பெற்றவர்களுக்கு சொந்த வீட்டு யோகமும் வாகன யோகமும் உண்டாகும். படித்து முடித்து வேலைதேடி அலைவோருக்கு நல்ல வேலை அமையும். அவர்கள் ஜாதகத்தில் 10-க்குடையவரும் சூரியனும் பலமாக இருந்தால் அரசு வேலை அமையும். ராகு- கேது அல்லது 12-க்குடைய கிரக தசாபுக்திகள் நடந்தால் வெளிநாட்டு வேலை யோகம் அமையும். மாணவர்களும் வெளி மாநிலம், வெளிநாடு சென்று படிக்கலாம். 3, 6-க்குடையவர் 2-ல் இருப்பதாலும், அவரை 2, 7-க்குடைய செவ்வாய் பார்ப்பதாலும் ஒருசிலருக்கு பங்காளி வகையிலும் உடன்பிறந்தவர்கள் வகையிலும் மனைவி வகையிலும் நிலவிய சிக்கல்களும் பிரச்சினைகளும் நிவர்த்தியாகி, ஒற்றுமையும் உதவி ஒத்தாசையும் அமையும்.

பரிகாரம்: கஞ்சனூர், உடையாளூர், திருநாவலூர், ஸ்ரீரங்கம் போன்ற திருத்தலங்களுக்குச் சென்று சுக்கிரனை வழிபடலாம்.



விருச்சிகம்


(விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிநாதன் செவ்வாய் 10-ல் திக்பலம் பெற்று தன் ராசியைப் பார்க்கிறார். 2, 5-க்குடைய குரு ஜென்மத்தில் நின்று 5, 7, 9-ஆம் இடங்களைப் பார்க்கிறார். 'ஜென்ம ராமர் வனத்திலே சீதையை சிறை வைத்தது' என்ற பாடல் விதி உங்களுக்குப் பொருந்தாது. அதற்கு மாறாக சீரான பலன்களையும், சிறப்பான பலன்களையும் சந்திக்கலாம். திருமணமாகாதவர்களுக்குத் திருமண யோகம் அமையும். புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் புத்திர பாக்கியத்தை அடையலாம். தகப்பனார் அல்லது பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினைகளில் போராடி வருகிறவர்களும், வழக்கு, வில்லங்கம், வியாஜ்ஜியம் போன்றவற்றை சந்திக்கிறவர்களும் இக்காலம் சாதகமான தீர்ப்புகளை சந்திக்கலாம். தகப்பனார், பாட்டனார் வகையில் வரவேண்டிய ஆஸ்திகள் எல்லாம் ஆதாயத்தோடு வந்துசேரும். விருந்து விழாக்களும், கேளிக்கை வைபவங்களும், சுபச்செலவுகளும் உண்டாகும். இதுவரை கடந்தகாலத்தில் மங்குசனியாக இருந்த நிலைமாறி ஏழரைச்சனி பொங்குசனியாக பொலிவைத் தரும். சிலர் வேலை மாறலாம். அல்லது பதவி உயர்வடையலாம். சொந்த வீடு கட்டலாம்.

பரிகாரம்: வைத்தீஸ்வரன் கோவில், பழனி அல்லது சென்னிமலை சென்று செவ்வாய்க்கு செவ்வரளி சாற்றி வழிபடலாம்.

தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)



தனுசு ராசிக்கு ஏழரைச்சனி

AUG16-RIL

நடக்கிறது. 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு முதல் சுற்று. 55 வயதைத் தாண்டியவர்களுக்கு இரண்டாம் சுற்று. 80 வயதைக் கடந்தவர்களுக்கு மூன்றாம் சுற்று. முதல் சுற்று மங்கு சனி; இரண்டாம் சுற்று பொங்கு சனி; மூன்றாம் சுற்று மரணச்சனி என்பர். மரணச்சனி என்றவுடன் மரணம் வந்துவிடும் என்று பயந்துவிடாதீர்கள். 94 வயதுவரை வாழந்த கலைஞர் மூன்று சனியையும் கடந்து நான்காவது சனியையும் சந்தித்தவர்தான். மூன்றாம் சுற்று மாரகம் ஏற்படுத்தினாலும் ஜாதகம் யோகமாக இருந்தால் அதுவே அதிர்ஷ்ட யோகமாக அமைந்துவிடும். அமிர்தயோகம், சித்தயோகம் என்று சொல்லுவதுபோல மரணத்தையும் மரண யோகம் என்று சொல்வார்கள். ஞானம் என்பது அந்திமக் காலத்தில் சாவதற்கு முதல் நாளில் கூட வரலாம். அதேபோல சிலருக்கு மரணம் ஏற்படுவதற்கு முன்பும் அதிர்ஷ்ட யோகம் வரும். அதனால்தான் ஜாதகம் எழுதுவதற்கு முன்பு 'ஜெனனி ஜென்ம சௌக்யானாம் வர்த்தனி குல சம்பதாம் பதவி பூர்வ புண்ணியானாம்' என்று எழுதுகிறார்கள். ஆகவே ஏழரைச்சனி சிலருக்கு யோகச்சனியாகவும் பொங்குசனியாகவும் நல்லது செய்யலாம்.

பரிகாரம்: குச்சனூர், திருநள்ளாறு, திருவிசைநல்லூர், திருநறையூர் சென்று வழிபடலாம்.



மகரம்
(உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)

மகர ராசிநாதன் சனி ராசிக்கு 12-ல் மறைகிறார். அவருக்கு வீடு கொடுத்த குரு அவருக்கு 12-ல் மறைகிறார். குருவுக்கு வீடு கொடுத்த செவ்வாய் மகர ராசிக்கு 8-ல் மறைகிறார். இப்படி மறைந்த கிரகங்கள் மறைந்த பலனைச் செய்யுமா- நிறைந்த பலனைச் செய்யுமா- சிறந்த பலனைச் செய்யுமா என்ற ஒரு கேள்வி எழலாம். புதன் ஒருவருக்கு மட்டுமே 'மறைந்த புதன் நிறைந்த தனம் தரும்' என்ற ஜோதிட விதியுண்டு. மற்ற எந்த கிரகங்களுக்கும் இந்த விதி பொருந்தாது. ஆனால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் யோகம்' என்பது போலவும், டபுள் மைனஸ்=

அன்னை பகவதி துணை

ஸ்ரீல ஸ்ரீ வராஹி ஆன்மீகம் மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையம்

இங்கு அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும்.

ஸ்ரீ வராஹி அன்னையின் மூலம் அனைத்துவிதமான கோளாறுகளும் சரி செய்யப்படும். நவக்கிரகக் கோளாறுகள் நீங்க, சத்ரு வசியம், சத்ரு நாசம், திருமணத்தடைகள் நீங்க, தகாத உறவுகளைப் பிரிக்க, காதலில் வெற்றி பெற, கடன் தொல்லைகள் தீர, வராத கடன்கள் வசூலாக, கணவன் மனைவி ஒன்று சேர, குழந்தை பாக்கியம் கிடைக்க, தீராத நோய்கள் தீர, தொழிலில் வெற்றி பெற, குழந்தைகள் நன்றாகப் படிக்க, வாஸ்து தோஷம் நீங்க, தோட்டம் வெள்ளாமை சிறக்க, கணவன்- மனைவி வசியம், அஞ்சனம் மற்றும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடனடி தீர்வு சர்வ வசிய அஞ்சனம் ராஜ வசிய மை கிடைக்கும். மூல வியாதி ஒரே முறை மருந்தின் மூலம் குணப்படுத்தப்படும்.

அனைத்துவிதமான மூலிகை செடிகளும் கிடைக்கும்.

சர்க்கரை நோய், ஆண்மைக் குறைவு, குடியை நிறுத்த மூலிகை மருந்து கிடைக்கும்


ஜோதிடர்களுக்கு முக்காலம் குறிசொல்லும் கர்ணாயட்சனி மற்றும் வாக்குபலித அஞ்சனம் கிடைக்கும்.

உயிர் காக்கும் மூலிகையான கருநொச்சி இலை கிடைக்கும்!

G.K. ஸ்ரீநிவாஸன், SMP, RMP.,

33, கருப்பணன் தெரு, நாயக்கன்காடு, கோபி-638 476, ஈரோடு மாவட்டம்.

முன்பதிவிற்கு 99940 55510, 96983 39955



ஒரே நாளில் எளிமையான முறையில் மாந்திரீகம் நேரிலும், தபால் மூலமும் கற்றுத்தரப்படும்.

ADVT

AUG16-RIL

ஒருப்ளஸ் என்பதுபோலவும் சிலநேரம் நல்லது செய்யும். ஒரு நீளமான கோடு. அதற்குப் பக்கத்தில் அதைவிட நீளமான கோடு வரைந்தால் முதல் கோடு சின்ன கோடாக மாறிவிடும். அதுபோல மனதை வருத்தும் ஒரு பிரச்சினை- அதைவிட பெரும் பிரச்சினை வரும்போது முதல் பிரச்சினை சமாளிக்கும் சாதாரண பிரச்சினையாக மாறிவிடும். பிரச்சினைகள் இல்லாதவர்கள் யாருமே இல்லை. அதேசமயம் அது விரலுக்குத் தகுந்த வீக்கமாக இருக்க வேண்டும். மனவுறுதி படைத்தவர்களுக்கு எந்தப் பிரச்சினையையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டு. அதேபோல தெய்வ நம்பிக்கை உடையவர்களுக்கும் அந்த மனவுறுதி கிடைக்கும்.

பரிகாரம்: திருப்பத்தூர், கண்டரமாணிக்கம் அருகில் பெரிச்சிகோவில் சென்று ஒற்றை சனீஸ்வரரை வழிபடவும். நவபாஷான பைரவர் சந்நிதியும் உண்டு.



கும்பம்

(அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)

t.me/Free_eMagazine

கும்ப ராசிநாதன் சனி 11-ல் பலம் பெறுகிறார். அவருக்கு வீடு கொடுத்த குரு 10-ல் இருக்கிறார். குருவுக்கு வீடு கொடுத்த செவ்வாய் 7-ல் நின்று கும்ப ராசியைப் பார்க்கிறார். எனவே இக்காலம் நற்காலம் என்றும் சொல்லலாம்; பொற்காலம் என்றும் சொல்லலாம். 'ஞாலம் கருதினுங் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்' என்று வள்ளுவர் சொல்லுவார். இடம், பொருள், ஏவல் என்பது தான் இதனுடைய ரகசியம். ஒரு உண்மைச் சம்பவ உதாரணம். காரைக்குடி கம்பன் விழாவில் செட்டிநாட்டு அரசரும் (அண்ணாமலைச் செட்டியார்), அன்றைய முதல்வர் கலைஞரும் கலந்துகொண்டார்கள். அவ்விழாவில், விழா ஏற்பாடு செய்திருந்த தமிழறிஞர், 'கம்பன் மணிமண்டபம் கட்டவேண்டும்; அதற்கு முதல்வர் கலைஞர் வழிவகை செய்யவேண்டும்' என்று பேசினார். அதற்கு கலைஞர், 'நான் வெறும் அமைச்சர்தான்; இங்கு அரசரே வருகைதந்திருக்கிறார்கள். அவர்களால் முடியாததா என்னால் முடியப்போகிறது?' என்று கூறினார். உடனே செட்டியார் அங்கேயே ஆரம்பச்செலவுக்கு ஒரு லட்ச ரூபாய் நன்கொடை அளித்துவிட்டார். இதுதான் சபையறிந்து, சந்தர்ப்பமறிந்து பேசுதல் என்று சொல்லப்படும். இதைக் கடைப்பிடித்தால் உங்கள் கனவுகளும் நனவுகளாகும்.

பரிகாரம்: சனியின் திருத்தலங்கள் சென்று வழிபடுவதோடு, கும்பகோணம் அருகில் எய்யலூர் சென்றும் வழிபடலாம்.



மீனம்

(பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

இன்றைய கோட்சார நிலையும் கிரக நிலையும் பன்னிரண்டு ராசிக்காரர்களில் இரண்டு ராசிக்காரர்களுக்குத்தான் சாதகமாக அமைகிறது. ஒன்று கடக ராசி; மற்றொன்று மீன ராசி. ஜோதிடத்தில் ஒரு பாடல் உண்டு. 'பாடப் படிக்கத் தேட சுகிக்க செலவழிக்க பரதவியம் பயில கற்கடகம் சிம்மம் கன்னிக் கல்லாது மற்கிடமேது மற்று' என்பது பாடல். பிரம்மா பூலோகத்தைப் படைக்கும்போது கடக லக்னம் உதயமானதாகப் புராணம் சொல்லுகிறது. அந்த கடகத்தில்தான் குரு பகவான் உச்சம் பெறுவார். அந்த குருவுக்கு 9-ஆமிடமாகிய மீன ராசி ஒரு சொந்த வீடு. ஆகவே கடகத்துக்குச் சொன்ன அத்தனை யோகமும் பலனும் மீன ராசிக்கும் உண்டு. தமிழ்நாட்டில் முதல்வர் இ.பி.எஸ். தனது ஆட்சி வலுவுக்காக ஓ.பி.எஸ்.ஸை துணை முதல்வராக ஆக்கியதுபோல, கடக ராசியும் மீன ராசியும் முதல்வர் அல்லது துணை முதல்வர் அந்தஸ்து பெறுகிறது. இதில் யார் முதல்வர், யார் துணை முதல்வர் என்பது (கடகமா மீனமா) அவரவர் எண்ணம், செயல்பாடுகளைப் பொருத்தது. கடகம்- சரராசி; மீனம்- உபய ராசி. கடகம் விட்டுக்கொடுக்காமல் போராடலாம். மீனம் பெருந்தன்மையோடு விட்டுக்கொடுக்கலாம். விட்டுக்கொடுப்பவன் கெட்டுப்போவதில்லை.

பரிகாரம்: ஆலங்குடி சென்று குரு பகவானை வழிபடவும். பட்டமங்கலம் குரு பகவானையும் வழிபடவும்.

AUG16-RIL

12 லக்னத்தினருக்கும் பணவரவைப் பெருக்கும் பரிகாரங்கள்!



சென்ற இதழ் தொடர்ச்சி...

சிம்ம லக்னம்

சிம்ம லக்னத்திற்கு தனவரவைத் தரக்கூடியவர் புதன். புதனே 2, 11-ஆம் அதிபதி. புதன் நல்லநிலையில் இருந்தாலே சிம்ம ராசியினர் சிறப்பான பொருளாதாரத்தை அடையமுடியும். புதன் எப்பொழுதும் சூரியனுக்கு முன் அல்லது பின்பாகவே இருப்பார். சூரியனுடன் இணைந்த புதன் சிம்மத்திற்கு நிறைவான தனவரவைத் தருவார். புதனுக்கு ராகு- கேது சம்பந்தம் இருந்தால் பணவரவில் ஏற்ற- இறக்கம் இருக்கும். புதனுடன் சனி சேர்ந்தால், இவர்கள் மற்றவர்களிடம் ஏமாந்து போவார்கள் அல்லது மற்றவர்கள் இவர்களை ஏமாற்றிவிடுவார்கள்.

இவர்களுடைய வளர்ச்சிக்கு முறையான திட்டமிடுதல் அவசியம். சிம்ம லக்னத்திற்கு புதன், சுக்கிரன் இணைந்தாலும் சிறப்பான வருமானத்தைப் பெற்றுத் தரும்.

பரிகாரம்

சிம்ம லக்னத்தினர் சிறப்பான தனவரவை அடைய ஞாயிறு மாலை ராகு வேளையில், தேன் தடவிய சப்பாத்தியை பைரவருக்குப் படைத்து உண்ண வேண்டும் .

கன்னி லக்னம்

கன்னி லக்னத்திற்கு தனவரவைத் தரக்கூடிய கிரகங்கள் சுக்கிரன், சந்திரன். சுக்கிரன் 2-ஆம் அதிபதி. சந்திரன் 11-ஆம் அதிபதி.

இந்த கிரக இணைவுகள் கேந்திர, திரிகோணங்களில் இருந்தால், வருடத்தின் 365 நாளும் பணம் வரும். ஒன்றை யொன்று பார்த்தாலும் பலன் உண்டு. கன்னி லக்னத்திற்கு 2-க்குரிய சுக்கிரனே ஒன்பதாம் அதிபதியாக வருவதால், ஜாதகரின் பொருளாதாரம் ஜாதகரைவிட ஜாதகரின் பெற்றோருக்குப் பெரிதும் பயன்படும். ஜாதகரும் பெற்றோருக் காகவே சம்பாதிப்பார்.

இந்த கிரக இணைவுடன் ராகு- கேது, செவ்வாய் சம்பந்தம் இருக்கக்கூடாது. ராகு- கேதுக்கள் தனவரவைத் தடை செய்யும். எட்டாமதிபதியாகிய செவ்வாய் சம்பந்தம் சுக்கிரனுக்கோ சந்திரனுக்கோ இருந்தால், வரும் வருமானம் கோர்ட் கேஸ் பிரச்சினைக்கும், முன்னோர்கள் சொத்தைப் பாதுகாப்பதிலும் சென்று விடும். பல நேரங்களில் மீளமுடியாத பொருளாதார இழப்பையும் அவமானத்தையும் ஏற்படுத்துகிறது.

பரிகாரம்

கன்னி லக்னத்தைச் சேர்ந்தவர்கள் பிரதோஷ நாட்களில் சிவனுக்கு பச்சைப் பயறு, சுண்டல் படைத்து தானம் தந்து உண்டுவர, பூர்வீகக் குற்றம்நீங்கி, குபேர சம்பத்துப் பெற முடியும்.



பிரசன்ன ஜோதிடர் ஐ. ஆனந்தி

AUG16-RK

துலா லக்னம்

துலா லக்னத்திற்கு தனவரவை ஏற்படுத்தக்கூடிய கிரகங்கள் செவ்வாய், சூரியன். செவ்வாய் 2-ஆம் அதிபதி. சூரியன் 11-ஆம் அதிபதி.

இந்த கிரகச் சேர்க்கை கேந்திர, திரிகோணங்களில் இருந்தால் வருமானம், அரசு ஆதரவு உண்டு. ஒன்றையொன்று பார்த்தாலும் வருமானம், அரசு ஆதாயம் உண்டு.

இந்த கிரகங்களுடன் ராகு- கேது சம்பந்தம் அரசு ஆதரவைத் தடைசெய்யும். 11-ஆம் அதிபதி சூரியனே பாதகாதிபதியாக வருவதால், தந்தைவழி உறவினர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்துவதில்லை. பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

பரிகாரம்

துலா லக்னத்தைச் சேர்ந்தவர்கள் வெள்ளிக்கிழமை லலிதா சகஸ்ர நாமத்தைப் பாராயணம் செய்து, சர்க்கரைப் பொங்கல் படைக்க வேண்டும்.

விருச்சிக லக்னம்

t.me/Free_eMagazine

விருச்சிக லக்னத்திற்கு தனவரவை ஏற்படுத்தக்கூடிய கிரகங்கள் குரு, புதன். குரு 2-ஆம் அதிபதி. புதன் 11-ஆம் அதிபதி.

குரு, புதன் இணைவு கேந்திர, திரிகோணங்களில் இருந்தால், தனவரவு திருப்தி தரும். ஒன்றையொன்று பார்த்தாலும் வருமானம் வந்துகொண்டே இருக்கும். குருவுடன் சம்பந்தம்பெறும் ராகு- கேது மிகப்பெரிய வரவைத் தந்து, மீளமுடியாத இழப்பையும் தரும்.

இந்த கிரகங்களுடன் சந்திரன் சம்பந்தம் இருக்கக்கூடாது. விருச்சிக லக்னத்திற்கு சந்திரன் பாதகாதிபதியாக இருப்பதால் மன நலம் பாதிக்கப்படுகிறது. பொருளாதாரம் பாதிக்கப்படுவதில்லை.

பரிகாரம்

விருச்சிக லக்னத்தைச் சேர்ந்தவர்கள் வியாழக்கிழமைதோறும் குழந்தைகள் காப்பகம் சென்று மஞ்சள் நிற இனிப்பு தானம்செய்ய வேண்டும்.

தனுசு லக்னம்

தனுசு லக்னத்திற்கு தனவரவைத் தரக்கூடிய கிரகங்கள் சுக்கிரன், சனி. சனி 2-ஆம் அதிபதி. சுக்கிரன் 11-ஆம் அதிபதி.

இந்த கிரகச் சேர்க்கை கேந்திர, திரிகோணங்களில் இருந்தால், வாழ்நாள் முழுவதும் தனவரவு மகிழ்வு தரும். ஒன்றையொன்று பார்த்தாலும் வருமானம் வரும். இந்த கிரக இணைவு எங்கிருந்தாலும் தனவரவில் குறைவிருக்காது.

இந்த கிரகங்களுடன் ராகு- கேது சம்பந்தமிருந்தால் பணம் போகும்வழி தெரியாது. இழப்பு மிகும்.

தனுசு லக்னத்திற்கு 6-ஆம் அதிபதி சுக்கிரன் பதினொன்றாம் அதிபதியாகவும் இருப்பதால், கடுமையான உழைப்பின்மூலம் இந்த யோகத்தைப் பெறமுடியும். சுக்கிரன் இவர்களின் ஆறாமதிபதியாக இருப்பதால், இவர்களின் திறமை எதிரிகளுக்கு அதிகமாகப் பயன்படுகிறது அல்லது நோய்த் தாக்கத்தைத் தருகிறது. இந்த கிரக இணைவுடன் 8-ஆம் அதிபதி சந்திரன் சம்பந்தப்பட்டால், வரும் வருமானம் நோய்தீர்க்க மட்டுமே பயன்படும்.

பரிகாரம்

தனுசு லக்னத்தைச் சேர்ந்தவர்கள் தினமும் சூரிய நமஸ்காரம்செய்து ஆதித்ய ஹிருதயம் பாராயணம் செய்யவேண்டும். அமாவாசை நாட்களில் முன்னோர் வழிபாடு செய்ய, பொருளாதாரத்தில் தன்னிறைவு கிடைக்கும்.

மகர லக்னம்

மகர லக்னத்திற்கு தனவரவைத் தரக்கூடிய கிரகங்கள் சனி, செவ்வாய். சனி 2-ஆம் அதிபதி. செவ்வாய் 11-ஆம் அதிபதி.

இந்த கிரகச் சேர்க்கை கேந்திர, திரிகோணங்களில் இருந்தால் தனவரவு பெருகும். ஒன்றையொன்று பார்த்தாலும் வருமானம், தனவரவு மகிழ்ச்சி தரும்.

இந்த கிரக இணைவுடன் ராகு- கேது, சூரியன் சம்பந்தம் பெறின் முன்னேறத் தடை உண்டு. இந்த கிரகங்களுடன் சூரியன் சம்பந்தம் பெற்றால், ஜாதகருக்கு உஷ்ணம் தொடர்பான நோய்கள் மிகுதியாகும். மேலும், சனி, செவ்வாய் சம்பந்தம் பலமுறை விபத்தையும், கண்டத்தையும் சந்திக்க வைக்கும். பொருளாதாரத்தில் நல்ல பலன் தரும்.

AUG16-RK

பரிகாரம்

செவ்வாய்க்கிழமை காலை 11.00-12.00 மணிக்குள் சனி ஓரையில் நல்லெண்ணெய் தானம் தரவேண்டும். சனிக்கிழமை காலை 8.00-9.00 மணிக்குள் செவ்வாய் ஓரையில் இட்லி, எள்ளுச் சட்னி, தண்ணீருடன் தானம் தரவேண்டும்.

கும்ப லக்னம்

கும்ப லக்னத்திற்கு தனவரவைத் தரக்கூடிய கிரகம் குரு.

இவர்களுக்கு குரு சிறப்பாக அமைந்து விட்டால், வருமானக்குறைவு இருக்காது. குருவுடன் சுக்கிரன் இணைந்தால், வாழ்நாள் முழுவதும் பொருளாதார குறைபாடே இருக்காது. இந்த கிரக இணைவு கேந்திர, திரிகோணங்களில் இருந்தால் மிகச்சிறப்பு. இந்த கிரகங்களுடன் ராகு- கேது சம்பந்தம் பெறும் ஏற்ற- இறக்கத்தைத் தரும்.

பரிகாரம்

ஆன்மிகப் பெரியோர்கள், சித்தர்களிடம் வியாழக்கிழமைகளில் வஸ்திர தானம் தந்து நல்லாசி பெறவேண்டும்.

மீன லக்னம்

மீன லக்னத்திற்கு தனவரவைத் தரக்கூடிய கிரகங்கள் செவ்வாய், சனி. செவ்வாய் 2-ஆம் அதிபதி. சனி 11-ஆம் அதிபதி.

இந்த கிரகச் சேர்க்கை கேந்திர, திரிகோணங்களில் இருந்தால், பெரும் தனவரவைத் தரும். ஒன்றையொன்று பார்த்தாலும் வருமானம் வந்துகொண்டே இருக்கும். சனி, செவ்வாய் இரண்டும் பகை கிரகங்கள் என்பதால், பொருளாதாரத்தில் சிறப்பான நிலையையும் தரும். அத்துடன் விபத்தையும் அறுவைச் சிகிச்சையையும் தரும். இந்த கிரகம் ராகு- கேது சம்பந்தம் பெறும்போது மீளமுடியாத இழப்பைத் தரும்.

பரிகாரம்

மீன லக்னத்தைச் சேர்ந்தவர்கள் திருச்செந்தூர் முருகனை வழிபடுவதுடன், சனிக்கிழமை வரும் பிரதோஷ நாட்களில் வில்வார்ச்சனை செய்துவர வேண்டும்.

செல்: 98652 20406

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை

உங்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு!

திருமணத்தடை நீங்க, குழந்தை பாக்கியம் கிட்ட, பிரிந்த கணவன்- மனைவி சேர்ந்து வாழ, கடன் நிவர்த்திபெற, தொழிலில் முன்னேற்றம்பெற, நல்ல வேலை கிடைக்க எளிய வழிபாட்டுமுறையில் தீர்வு கிடைக்கச் செய்யமுடியும்.

ஜாதகம், பிரசன்னத்தின்மூலம் கர்மவினைத் தாக்கம்- முன்வினை கர்மாவைக் கண்டறிந்து முன்னேற்றம் பெற சிறப்பு ஆலோசனை தரப்படும்.

வீடு, தொழில் நிறுவனங்களின் வாஸ்து குறைபாடு சரிசெய்யப்படும். குழந்தைகளுக்கு, தொழில் நிறுவனங்களுக்கு அதிர்ஷ்டப் பெயர் அமைத்துத் தரப்படும். ஜாதகம் கணித்துத் தரப்படும்.

சென்னை வருகை...

ஜோதிடர் ஐ. ஆனந்தி அவர்கள் ஆகஸ்ட் 17, 18-2019 (சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில்...

முகவரி: விருதுநகர் நாடார் மேன்ஷன், பழைய எண்: 113, புதிய எண்: 50, பூந்தமல்லி ஹைரோடு, (ரிப்பன் பில்டிங் அருகில்), பெரியமேடு, சென்னை-3.

முன்பதிவிற்கு அலைபேசி எண்: 98652 20406

பிரசன்ன ஜோதிடர் ஐ. ஆனந்தி
ஸ்ரீஹரி ஜோதிட நிலையம்

1/6, அந்தோணிசாமி தெரு, மாரியம்மன் கோவில் எதிரில், சாமிநாதபுரம், சேலம்-9.



சிறந்த முறையில் திருமணப் பொருத்தம் பார்க்கப்படும்

ADVT

AUG16-RI



கவலைகள் மாற்றும் வழிபாடு!

ஒருவர் கவலையுடன் இருக்கிறார் என்றால், அவர் அதிகமாக சிந்திக்கிறார் என்று அர்த்தம். ஒருவர் நிறைய சிந்திக்கிறார் என்றால், அவருடைய ஜாதகத்தில் லக்னாதிபதி பலவீனமாக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

லக்னாதிபதி பலவீனமாக உள்ளவர் அதிகமாகக் கவலைப்படுவார். எதையும் சந்தேகத்துடன் பார்ப்பார்.

ஒருவரின் ஜாதகத்தில் 2-ஆம் பாவம் கெட்டுப்போய் அங்கு பாவகிரகங்கள் இருந்தால், அந்த ஜாதகர் எப்போதும் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்ற கவலையிலேயே இருப்பார். 2-ஆம் பாவத்தில் செவ்வாய்- சூரியன், செவ்வாய்- ராகு, செவ்வாய்- சனி- ராகு, சூரியன்- சனி- ராகு ஆகிய கிரகச் சேர்க்கை இருந்தால், அந்த ஜாதகரின் குடும்பத்தில் வீண்விவாதம், சண்டை இருக்கும். அதன்காரணமாக ஜாதகர் எப்போதும் கவலையில் இருப்பார்.

3-ஆம் பாவாதிபதி பாவகிரகமாகி 2-ஆம் பாவத்தில் இருந்து, 6-ஆம் பாவத்திலும் பாவகிரகம் இருந்தால், அவர் எப்போதும் தன் குடும்பத்தைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பார். அவருக்கு சகோதரர்களின் தொல்லைகள் இருக்கும். அதிக பித்தம் காரணமாக தூக்கம் சரியாக வராது. அதனால் அவருக்கு கவலை உண்டாகும்.


4-ஆம் பாவாதிபதி நீசமடைந்தால் அல்லது 4-ல் சனி, கேது அல்லது ராகு, சனி இருந்தால், அவருடைய தாயின் உடல்நலம் பாதிக்கப்படும். வீட்டில் மகிழ்ச்சி இருக்காது. வீட்டில் வாஸ்து தோஷம் இருக்கும். அதன்காரணமாக ஜாதகர் கவலையில் மூழ்குவார்.

ஒரு ஜாதகத்தில் 5-ஆம் வீட்டிற்கு அதிபதி நீசமடைந்தால் அல்லது அஸ்தமனமாக இருந்தால் அல்லது 5-ல் கேது அல்லது நீச குரு இருந்தால், அவருக்கு பிள்ளைகளால் பிரச்சினைகள் உண்டாகும். சிலருக்கு வாரிசு இருக்காது. அதனால் அவர் கவலையுடன் இருப்பார்.

6-ஆவது பாவத்தில் பாவகிரகம் இருந்தால் நன்மை செய்யும். ஆனால் 6-ஆம் வீட்டின் அதிபதி அஸ்தமனமாக அல்லது நீசமாக அல்லது 6-ல் சனி இருந்து, லக்னத்தில் சூரியன் இருந்தால், அவருக்கு ரத்தம் சம்பந்தப்பட்ட நோய் இருக்கும். சிலருக்கு ரத்த அழுத்தம் இருக்கும். சிலருக்கு பித்தம் அதிகமாக இருக்கும். பகைவர்களால் பிரச்சினைகள் ஏற்படும். அதனால் சரியாகத் தூக்கம் வராது. எப்போதும் சிந்தனையுடனும் மனக்கவலையுடனும் காட்சியளிப்பார்.

7-ஆம் பாவாதிபதி அஸ்தமனமாக அல்லது நீசமாக இருந்தால், அவருக்கு தன் தொழில் பங்குதாரரால் பிரச்சினைகள் உண்டாகும். மனைவியாலும் தொல்லைகள் உண்டாகும். மனைவிக்கு கணவரால் பிரச்சினைகள் இருக்கும். அங்கு செவ்வாய்- சனி அல்லது ராகு- சனி அல்லது சனி- சூரியன்- செவ்வாய் இருந்தால் திருமணத் தடை இருக்கும். திருமணம் நடந்திருந்தால், அதற்குப் பிறகு பிரச்சினைகள் இருக்கும். வீட்டில் மகிழ்ச்சி இருக்காது. அதனால் ஜாதகர் எப்போதும் கவலையுடன் இருப்பார்.

8-ஆம் பாவாதிபதி பாவ கிரகத்துடன் 8-ல் இருந்தால், இல்வாழ்க்கையில் சந்தோஷம் இருக்காது. கணவன்- மனைவி உறவு சரியாக இருக்காது. சிலருக்கு சிறிய அளவில்



மகேஷ் வர்மா

t.me/FreeMagazine
AUG16-RIL

இந்த வாரம் உங்களுக்கு
கை கொடுப்போர் யார், கைவிடுவோர் யார்?
11-8-2019 முதல் 17-8-2019 வரை

இந்த ஏழு நாட்களில் உங்களுக்கு எந்த எண்காரர் கை கொடுப்பார், எந்த எண்காரர் கைவிடுவார் என்கிற குறிப்பு தரப்பட்டுள்ளது.

இது பிறந்த தேதியின் அடிப் படையில் தரப்பட்டுள்ள குறிப்பு ஆகும். பிறந்த தேதி தெரியாத வர்கள் அவரவரின் பெயர் எண்களின் அடிப்படையில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

உங்கள் எண்	கைகொடுப்போர் எண்	நடுநிலையாளர் எண்	கைவிடுவோர் எண்
1.	3, 7, 9	1, 4, 5	2, 6, 8
2.	1, 2, 6	3, 5, 8	4, 7, 9
3.	3, 5, 8, 9	1, 4	2, 6, 7
4.	1, 4, 7	2, 5, 9	3, 6, 8
5.	2, 3, 9	1, 6, 7, 8	4, 5
6.	3, 6, 8	1, 2, 4, 7	5, 9
7.	1, 5, 7	3, 8, 9	2, 4, 6
8.	2, 7, 8	1, 5, 6	3, 4, 9
9.	1, 3, 5, 9	2, 4	6, 7, 8

விபத்துகள் ஏற்படும். சிலருக்கு தொழிலில் அவ்வப்போது நஷ்டம் உண்டாகும். சந்திரன் 8-ல் இருந்து, அத்துடன் புதன், சூரியன், சுக்கிரன் அல்லது சந்திரன், செவ்வாய், சுக்கிரன் இருந்தால் தூக்கம் சரியாக வராது. சிலர் தூக்கத்தில் உளறுவார்கள்.

9-ஆவது பாவாதிபதி 8-ல் இருந்தால், அவருடைய வாழ்க்கையில் பல சிக்கல்கள் இருக்கும். 9-ஆவது வீட்டில் ராகு இருந்தால் 27 வயதுவரைக்கும் பலவிதக் கஷ்டங்களை அனுபவிப்பார். 9-ஆவது வீட்டின் அதிபதி பாவகிரகத்துடன் இருந்தால், சிலர் தந்தை யுடன் வாழமாட்டார்கள். தந்தைக்கு உடல்நல பாதிப்பு இருக்கும். அவர் அடிக்கடி பயணம் செய்யவேண்டியதிருக்கும். அதனால் மனக் கஷ்டங்கள் ஏற்படும்.

10-ஆவது பாவாதிபதி அஸ்தமனமாகவோ நீசமாகவோ இருந்தால் அவருக்கு தொழில் சரியாக நடக்காது. தாத்தாவால் மகிழ்ச்சி கிடைக்காது. 10-ஆம் பாவாதிபதி 6 அல்லது 8-ல் இருந்தால் சிலருக்கு கடன் பிரச்சினை கள் இருக்கும். அதன்காரணமாக கவலை உண்டாகும்.

11-ஆம் பாவாதிபதி நீசமாகவோ அஸ்தமன மாகவோ இருந்தால் தன் சகோதரர்களால் சந்தோஷம் கிடைக்காது. பண வரவு இருக்காது. சிலர் அதிகமாக சிந்திப்பார்கள். சிலருக்கு வயிறு சம்பந்தப்பட்ட நோய் இருக்கும். 11-ஆவது வீட்டிற்கு அதிபதி பாவகிரகத்துடன் இருந்தால், சிலருக்கு லாபம் கிடைக்கக்கூடிய நேரத்தில் பெரிய அளவில் நஷ்டம் உண்டாகும். அதனால் மன உளைச்சல் ஏற்படும்.

12-ஆம் பாவாதிபதி பாவகிரகத்துடன் 12-ல் இருந்தால் தூக்கம் சரியாக வராது. கணவன்-மனைவி உறவு சரியாக இருக்காது. அதனால் கவலை உண்டாகும்.

t.me/Free_eMagazine

பரிகாரங்கள்

கவலை இல்லாமல் சந்தோஷமாக இருப் பதற்கு...

வாழும் வீட்டில் தேவையற்ற பொருட்களை சேர்த்து வைக்கக்கூடாது.

தினமும் இரவில் படுப்பதற்கு முன்பு தன் குலதெய்வத்தை வணங்கவேண்டும். சிறிது வெல்லம் சாப்பிட்டுவிட்டுத் தூங்குவது நல்லது.

தினமும் அரசமரத்திற்கு நீர் வார்க்க வேண்டும். அரசமரத்தைச் சுற்றிவந்து வழி படுதல் நன்று.

சனிக்கிழமை அரசமரத்திற்குக்கீழே ஒரு தீபத்தை ஏற்றவேண்டும்.

தினமும் சூரியனுக்கு நீர் வார்த்து வணங்குதல் நன்மை தரும்.

9-ஆவது வீட்டு அதிபதியின் ரத்தினத்தை அணியலாம்.

செல்: 98401 11534

AUG16-RIL

12 ராசியி
அதிர்ஷ்
வாரி வ
அற்புத

அதிர்ஷ்டலட்சுமி எப்போதுதான் கண் திறப்பாளோ என ஏங்கும் வாசகர்கள் பலருண்டு. வாழ்வில் வசந்தங்கள் வாசல் ஏறிவரும் காலம் எது? சிரிப்பும் சிருங்காரமும் சிறப்படைவது எப்போது என அறியவிரும்பும் ஜோதிட நெஞ்சங்களுக்கான வரிகள் இவை- குரு அருளால்.

சந்திர கேந்திரங்களில் உங்களின் குருபகவான் உலவும் கோட்சாரங்களில், அந்த குருவுக்கு 8, 6, 3-ஆம் ராசியில் பகலவன் சஞ்சரிக்கும் மாதங்களில் (Sun Transit) குடிசையில் பிறந்தவரும் கோபுர உச்சிக்குச் செல்லமுடியும் என்பது ஆதித்ய நியதி. விளக்கமாகச் சொல்வதென்றால், இந்த ஆண்டின் குருவுக்கு 3, 6, 8-ஆம் வீட்டில் சூரியன் நகரும் மாதங்களில் சாமானியனும் சர்வசக்தி படைத்தவனாக முடியும். திடீர் தனப்பிராப்தி, நிலம், வீடு, சொத்து மதிப்பு கூடி நல்ல விலை கிடைத்தல், தொழில்துறையிலும் பெரிய ஆதாயங்கள் கிடைத்தல், கள்ளச்சந்தை, பங்கு மார்க்கெட்- இப்படி ஏதாவது ஒருவழியில் உயர்வடைவீர்கள். அதிர்ஷ்டலட்சுமி உங்களின் கரம் பிடிப்பாள்.

இனிவரும் வரிகளில் சிறந்த பண்டிதர்கள் குறித்த யோக முகூர்த்தக் காலப்படி, 12 ராசி வாசகர்களுக்கும் மிக அதிர்ஷ்டமான காலங்களைத் தொகுத்தளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

t.me/FreeeMagazine

மேஷ ராசி வாசகர்களுக்கு

உங்களின் ஜாதகப்படி தனகாரகன் குருபகவான் மேஷ ராசியில் சஞ்சரிக்கும் காலங்களில், அந்த ஆண்டின் கார்த்திகை, ஆனி, புரட்டாசி மாதங்களில் வரும் அஸ்வினி, பரணி, கார்த்திகை நட்சத்திரம் நடைபெறும் தினங்களில் தனவரவு அமோகமாக உண்டு. அதிர்ஷ்ட முகூர்த்தம் இவை. கடகத்தில் குரு உலவும் ஆண்டுகளில் அமையும் மாசி, மார்கழி, புரட்டாசி மாதங்களின் கார்த்திகை, பரணி, அஸ்வினி நாட்களில் பம்பர் பரிசுகள், கேட்ட இடத்தில் கடன் கிட்டும்- மானியத்துடன். பணக் கவலை தீர்க்கப்படும் காலமிது. பணநாயகர் குரு துலா ராசியில் உலவும் காலங்களில் வரும் பங்குனி, மார்கழி, வைகாசி மாதங்களில் அஸ்வினி, பரணி, கார்த்திகை நாட்கள் பெரும் தனவரவு தரும். பாக்கெட் நிரம்பும் நாட்களிவை.

ரிஷப ராசி அன்பர்களுக்கு



சுபிட்சகாரகன் சுக்கிரனின் அருளாசி பெற்ற ஆண்- பெண்களின் குரு ரிஷபத்தில் உலவும் கோட்சாரத்தில் வரும் மார்கழி, ஐப்பசி, ஆடி மாதங்களின் மிருகசீரிடம், ரோகினி, கார்த்திகை நட்சத்திர நாட்களில் மிக தனயோகம் கிட்டும். அதிர்ஷ்டமான நாட்கள் இவை. பணம், புகழ், அந்தஸ்து தரும். குரு சிம்ம ராசியில் நகரும் ஆண்டுகளில் பங்குனி, தை, ஐப்பசி மாதத்தில் வரும் ரோகிணி, மிருகசீரிட நட்சத்திர நாட்களில் தனயோகம் சித்திக்கும். விருச்சிக ராசியில் குரு



அகஸ்தியா

AUG16-RK

னருக்கும்
ஷடத்தை
ழங்கும்
நாட்கள்!



வரும் காலங்களில் தை, ஆனி, சித்திரை மாதங்களில் அமையும் மிருகசீரிடம், ரோகிணி மற்றும் கார்த்திகை நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்டமானவை. செல்வம் வந்துசேரும். ஏதாவது ஒருவழியில் பணக்கஷ்டம் நீங்கும்.

மிதுன ராசி புத்திசாலிகளுக்கு

உங்களின் யோக முகூர்த்தங்கள் எவை எனக் கேட்டால் உங்கள் ராசியிலேயே குரு உலவும் கோட்சார ஆண்டின் தை, ஆவணி, கார்த்திகை மாதங்களின் புனர்பூசம், திருவாதிரை, நட்சத்திர நாட்கள் மிக யோகம் தரும். வங்கிக் கடன் மற்றும் வாராக்கடன் உடன் வந்து பையை நிரப்பும் அதிர்ஷ்ட நாட்கள் இவை. கன்னி ராசியில் குரு வரும் காலம் மாசி, சித்திரை, கார்த்திகை மாதங்களின் மிருகசீரிடம், புனர்பூசம், திருவாதிரை நட்சத்திரமுள்ள நாட்கள் யோகபலம் தருபவை. குருபகவான் ஆட்சிபெற்று தனுசு ராசியில் உலவும் கோட்சார ஆண்டின் ஆடி, வைகாசி, மாசி மாதங்களில் வரும் புனர்பூசம், திருவாதிரை நட்சத்திர நாட்கள் அதிகயோகம் தரும். எந்தவழியிலாவது பணம் கிட்டும். மீன ராசியில் குரு உலவும்போது மிதுன ராசி தொழிலதிபர்கள், ஆசிரியர்களுக்கு ஆவணி, வைகாசி, ஐப்பசி மாதங்களில் வரும் திருவாதிரை, புனர்பூசம், மிருகசீரிடம் நட்சத்திர நாட்கள் அதிர்ஷ்டம் தரும்.

கடக ராசி உள்ளங்களுக்கு

மிகவும் யோகமான 'லக்கி' நாட்கள் சொல்லவேண்டு மானால், கடகத்தில் குரு சஞ்சரிக்கும் ஆண்டின் மாசி, மார்கழி, புரட்டாசி மாதங்களில் அமையும் ஆயில்யம், பூசம் ஆகியவையே. துலா ராசியில் குரு வரும் கோட்சாரத்தில் பங்குனி, மார்கழி மாதங்களின் பூசம், புனர்பூசம், ஆயில்ய நட்சத்திர நாட்கள் ஆயிரமாயிரமாக வரவுகளை வழங்கும் அதிர்ஷ்ட முகூர்த்த நாட்கள் இவை. குறிப்பாக மேஷத்தில் குருபகவான் நகரும் காலம் கார்த்திகை, ஆனி, புரட்டாசி மாதங்களில் வரும் ஆயில்யம், புனர்பூசம், பூச நட்சத்திர நாட்கள் யோகமானவை. சுபகாரியங்களுக்குப் பயன்படுத்த ஆதாய வரவு மிகும்.

சிம்ம ராசி நெஞ்சங்களுக்கு

பணத்திற்குக் காரக கிரகம் குரு உங்கள் ராசிமீது வரும் ஆண்டுகளில், தை, பங்குனி, ஐப்பசி மாதத்தில் வரும் உத்திரம், மகம், பூர நட்சத்திர நாட்கள் மிக யோகம் தரும். பெரிய கான்டிராக்ட், அரசியல், உயர்பதவி அனுகூலம் உண்டு. விருச்சிக ராசியில் குரு உலவும்போது தை, ஆனி, சித்திரை மாதத்து உத்திரம், பூரம், மக நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்டமானவை. பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை தரும் அதிர்ஷ்ட நாட்கள் இவையே. கும்பத்து குருவாகி புரட்டாசி, ஆடியில் வரும் மகம், பூரம், உத்திர நாட்கள் மகா தனயோகம் தருவது நியதி. ரிஷப ராசியில் குருவந்து ஆடி, ஐப்பசி மாதத்தின் மகம், பூர நட்சத்திர நாட்களும் நன்மைகள் பல தரும். வேலை அழைப்புக் கடிதம், பரமோஷன் தகவல் ஆனந்தமளிக்கும்

t.me/Free_eMagazine
AUG16-RIL

அதிர்ஷ்ட நாள் உங்களுக்கு இதுவே.

கன்னி ராசி வாசகர்களுக்கு

கோட்சாரத்தில் குருபகவான் கன்னி ராசியில் வரும் காலத்தில் மாசி, கார்த்திகை, சித்திரை மாதங்களில் வரும் அஸ்தம், சித்திரை, உத்திர நட்சத்திர நாட்களில் அதீத தனவரவுண்டு. தனுசுவில் குரு உலவும் கோட்சார ஆண்டில் மாசி, ஆனி, வைகாசி மாதங்களில் வரும் அஸ்தம், சித்திரை நாட்களில் அதிர்ஷ்டம் அரவணைக்கும். மீனத்தில் குரு வரும் காலம் ஐப்பசி, ஆனி மாதங்களில் அமையும் சித்திரை, அஸ்த நாட்களில் யோக முகூர்த்தம், தனவரவு மேன்மை உண்டு.

துலா ராசி யோகசாலிகளுக்கு

குருபகவான் கடகத்தில் சஞ்சரிக்கும் ஆண்டில் நடைபெறும் மாசி, மார்கழி, புரட்டாசி மாதத்தின் விசாகம், சுவாதி, சித்திரை நாட்களில் யோகம் மனமகிழ்ச்சி தரும். மேஷ ராசியில் குரு சஞ்சரிக்கும் காலம் நடைபெறும் கார்த்திகை, ஆனி, புரட்டாசி மாதங்களின் சுவாதி, விசாக நட்சத்திர நாட்கள் மகாதனயோகம் தரும் அதிர்ஷ்ட முகூர்த்தம்.

விருச்சிக ராசி வாசகர்களுக்கு

உங்கள் மனக்கவலை, பணக் கவலைகள் தீர, குருபகவான் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கும் ஆண்டில், தை, சித்திரை, ஆனி மாதங்களில் நடப்பில் வரும் கேட்டை, விசாகம், அனுஷ நட்சத்திர நாட்களில் புதுத்தொழில் ஆரம்பம், புதுமனைப் புகுதல், குழந்தைகளுக்கு சுபகாரியம் செய்தல், தங்க ஆபரணங்கள் வாங்குதல் சிறப்பு. மிக அனுகூலமான வரவுகள் அதிகம் இருக்கும் முகூர்த்த நாட்கள் இவை. கும்ப ராசியில் குரு உலவும்போது, புரட்டாசி, ஆனி மாதங்களில் வரும் கேட்டை, விசாக நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்டம் தரும். ரிஷப ராசியில் குரு நகரும் வருடத்தின் ஐப்பசி, மார்கழி மாதங்களில் நடப்பில் வரும் விசாகம், கேட்டை நட்சத்திர நாட்கள் மகா தனயோகம் தரும் மிக அதிர்ஷ்ட முகூர்த்தம். பெரிய இடத்து சம்பந்தம் சுபமாகப் பேசி முடிக்கப்படும்.

தனுசு ராசி பிரமுகர்களுக்கு

கன்னி ராசியில் குருபகவான் சஞ்சரிக்கும் காலங்களில் வரும் மாசி, சித்திரை, கார்த்திகை மாதங்களில் நடப்பில் வரும் உத்திராடம், மூலம், பூராட நட்சத்திர நாட்களில் பொன்பொருள் சேர்க்கை, பரிசு, பணவரவு எதிர்பாராமல் கிட்டும். வெளிநாட்டு வரன் நிச்சயிக்கப்படும். தனுசு ராசியின்மீது குரு நகரும் ஆண்டுகளில் மாசி, வைகாசி மாதத்தில் வரும் பூராடம், உத்திராட நட்சத்திர நாட்களில் தனயோகம், அதிர்ஷ்டம் மிகும். குருவீடான பெண் ராசி மீனத்தில் பொன்னவன் ஒளிரும் காலங்களில் ஆவணி, ஐப்பசி, வைகாசி மாதத்தின் பூராடம், உத்திராட நட்சத்திர நாட்கள் பெரும் செல்வம் தானாகச் சேரும் மிக அதிர்ஷ்ட நாட்கள். தீட்டிய திட்டங்கள் அன்றே செயல்பாட்டிற்கு வரும்.

மகர ராசி அன்பர்களுக்கு

துலா ராசியில் குருபகவான் அமர்ந்த ஆண்டில் நடப்பில் வரும் பங்குனி, வைகாசி, மார்கழி மாதத்தின் அவிட்டம், திருவோண நட்சத்திர நாட்களில் பெரும் செல்வம் சேரும்; மிக அதிர்ஷ்ட முகூர்த்தம். கடக ராசியில் குருபகவான் உலவும் கோட்சாரங்களில் புரட்டாசி, மார்கழி, மாசி மாதத்தில் வரும் உத்திராடம், திருவோணம், அவிட்ட நட்சத்திர நாட்களில் மிக தன வரவு எதிர்பார்க்கலாம். தொட்டது துலங்கும் முகூர்த்தம். மேஷத்தில் குரு நகரும் காலத்தில் கார்த்திகை, புரட்டாசி, ஆனி மாதங்களில் நடப்பில் வரும் உத்திராடம், திருவோண நட்சத்திர நாட்கள் மிக உன்னதமான பொருள்வரவு தரும். நீண்டநாள் பேசிக்கொண்டிருந்த வது-வரன்கள் சட்டென பேசி முகூர்த்தம் குறிக்கப்படும்.

கும்ப ராசி தர்மசிந்தனையாளர்களுக்கு

விருச்சிக ராசியில் குரு வரும் கோட்சார ஆண்டின் தை, ஆனி, சித்திரை மாதத்து சதயம், பூரட்டாதி நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்டமானவை. போட்டி பந்தயங்கள், நிலம் பதிவு, பி.எப். இன்சூரன்ஸ் தொகை இனங்களில் ஆதாய வரவுண்டு. கும்ப

t.me/Free_eMagazine
AUG16-RIZ

AVOID TO DOWNLOAD FROM userupload.net/in, proapk.net & urlweb.net SPAM WEBSITES

ராசிக்கு குருப்பெயர்ச்சியான ஆண்டில் வரும் சித்திரை, புரட்டாசி மாதங்களில் சதயம், பூரட்டாதி நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்டமானவை. நீண்டநாள் வாராக் கடன் வசூலாகும். வழக்குகளில் சாதகமாக தீர்ப்பு வரும் நாள். சிம்ம ராசியில் குரு உலவும் கோட்சாரங்களில் நடப்பில் வரும் தை, ஐப்பசி மாதத்து அவிட்டம், பூரட்டாதி, சதய நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்ட தன முகூர்த்தம்.

மீன ராசி ஜாதகர்களுக்கு

குருவின் ஆட்சி வீடான தனுசு ராசியில் சஞ்சரிக்கும் ஆண்டுகளில் நடக்கும் ஆடி, மாசி, வைகாசி மாதங்களில் நடப்பில் வரும் ரேவதி, பூரட்டாதி நட்சத்திர தினங்கள் மிகயோகமான பலன்கள் நடக்கும். எதிர்பார்த்த மற்றும் திடீர் தனவரவு தரும் முகூர்த்தமிது. மிதுன ராசியில் குரு நகரும்போது வரும் ஆவணி, தை மாதத்து பூரட்டாதி, ரேவதி, உத்திரட்டாதி நட்சத்திர நாட்கள் மகா தனயோகம் தரவல்லவை. மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் கோட்சாரத்தில் வரும் ஐப்பசி, வைகாசி, ஆவணி மாதங்களில் நடப்பில் வரும் பூரட்டாதி, ரேவதி நட்சத்திர நாட்கள் மிக அதிர்ஷ்டமானவை. எதிர்பார்த்த உத்தியோக உயர்வு, மேல்வருமானம், புதிய நகை, பத்திரப் பதிவு போன்ற சுபகாரியங்கள் திடீரென அரங்கேறும் அதிர்ஷ்ட முகூர்த்த நாட்கள்.

முடிவுரையாக, உங்களின் ராசி, லக்னம் எதுவானாலும் ஜாதகப்படி 1, 5, 9-க்குரிய கிரக தசாபுக்திகளின் நடப்பில்தான் இஷ்டபூர்த்தி, தன மேன்மை, ஆனந்த வாழ்வளிக்கும் என்பது ஜோதிட நியதி.

செல்: 75399 10166

இந்த வாரத்தில் அனுகூலமான நாளும், நேரமும்

11-8-2019 முதல் 17-8-2019 வரை

ஒவ்வொரு ராசிக்காரரும் இங்கே குறிப்பிட்டுள்ள தேதி, நேரத்தில் முக்கியப் பணிகளில் ஈடுபடலாம்.

மேஷம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கு:

11-8-2019	காலை 6.00-12.00, பகல் 2.00-4.00
12-8-2019	காலை 6.00-7.00, பகல் 12.00-2.00 மாலை 3.00-6.00
13-8-2019	காலை 7.00-9.00, பகல் 12.00-1.00 மாலை 5.00-6.00
14-8-2019	காலை 6.00-7.00, 9.00-12.00 பகல் 2.00-5.00
15-8-2019	காலை 8.00-12.00, மாலை 3.00-6.00
16-8-2019	காலை 6.00-9.00, பகல் 12.00-3.00 மாலை 5.00-6.00
17-8-2019	காலை 7.00-8.00, 11.00-1.00 மாலை 4.00-6.00

ரிஷப ராசிக்காரர்களுக்கு:

14-8-2019	காலை 6.00-7.00, 9.00-12.00 பகல் 2.00-5.00
15-8-2019	காலை 8.00-12.00, மாலை 3.00-6.00
16-8-2019	காலை 6.00-9.00, பகல் 12.00-3.00 மாலை 5.00-6.00
17-8-2019	காலை 7.00-8.00, 11.00-1.00 மாலை 4.00-6.00

t.me/Free_eMagazine

மிதுன ராசிக்காரர்களுக்கு:

11-8-2019	காலை 6.00-12.00, பகல் 2.00-4.00
12-8-2019	காலை 6.00-7.00, பகல் 12.00-2.00 மாலை 3.00-6.00
16-8-2019	காலை 6.00-9.00, பகல் 12.00-3.00 மாலை 5.00-6.00
17-8-2019	காலை 7.00-8.00, 11.00-1.00 மாலை 4.00-6.00

கடக ராசிக்காரர்களுக்கு:

11-8-2019	காலை 6.00-12.00, பகல் 2.00-4.00
12-8-2019	காலை 6.00-7.00, பகல் 12.00-2.00 மாலை 3.00-6.00
13-8-2019	காலை 7.00-9.00, பகல் 12.00-1.00 மாலை 5.00-6.00
14-8-2019	காலை 6.00-7.00, 9.00-12.00 பகல் 2.00-5.00
15-8-2019	காலை 8.00-12.00, மாலை 3.00-6.00

AUG16-RIL



கந்தர்வ நாடி!

t.me/Free_eMagazine

	சந்திரன்		
	கந்தர்வ நாடி ஜாதகம்-67		
			சனி செவ்
	புதன் சுக்கிரன்	சூரியன்	லக்னம் குரு

வானவில்லில் நாம் காணும் வண்ணங்களைப்போல் (VIBGYOR) ஏழுவிதமான மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டவர்களாகவே மனிதர்கள் பிறக்கிறார்கள். வண்ணங்களே எண்ணங்கள். ஏழு வண்ணங்களும் ஏழு கிரகங்களைக் குறிக்கும். இதில் சூரியன் சிவப்பையும், செவ்வாய் செம்மஞ்சளையும், குரு மஞ்சளையும் சுட்டிக்காட்டுவன. இந்த வண்ணங்கள் உஷ்ணம், சுறுசுறுப்பு போன்ற தன்மைகளை வெளிப்படுத்துவன. அதனாலேயே பஞ்சபூதங்களில் நெருப்பைக் குறிக்கும் மேஷம், சிம்மம், தனுசு ராசிகளின் மூலத்திரிகோணாதிபதிகளாக முறையே செவ்வாய், சூரியன், குரு அமைகிறார்கள். காலையில் தாமரையும், இரவில் அல்லியும் மலரும் சூட்சுமம் இதிலடங்கும். ஒரு ஜாதகரின் சுவை, ஒளி, உணர்வு, ஓசை, மணம் என்னும் ஐந்து புலன்களின் ஈடுபாடும் கிரகங்களின் அமைப்பினாலேயே மாறுபடுகிறது என்பதே 'கந்தர்வ நாடி'யின் கூற்று.

"அஷ்டபுரீசுவரரே! கலியுகத்தில் தீயகுணமுள்ளவர்களே எல்லாரையும் அடக்கியாளும் வலிமை பெற்றவர்களாகத் தோற்றமளிப்பதன் காரணத்தை விளக்குமாறு வேண்டுகிறேன்" என அன்னை பாலாம்பிகை காட்டூர் எனும் திருத்தலத்தில் உறையும் அருள்மிகு உத்ரவைத்தியநாதரைப் பணிந்து கேட்டாள்.

யோகநாதர் உரைத்தது- "மரங்கள் உதிர்க்கும் கனிகளை உண்பவர்கள் சத்துவ குணவாதிகள். மரத்திலேறி கனிகளைப் பறித்துண்பவர்கள் ரஜோ குணத்தைச் சார்ந்தவர்கள். கனியிருக்கும்போது காய்களைக் கவர்ந்து உண்போர் தமோ குணத்தின் காவலர்கள். சப்தரிஷிகள் வகுத்த யுகதர்மத்தின்படி, கலியுகத்தில் பேயின் ஆட்சியும், பிணம் தின்னும் சாத்திரங்களுமே மின்னுவது போன்ற தோற்ற மாயையை உருவாக்கும். அணைவதற்குமுன் விளக்கு பிரகாசிப்பது போல, தீயோர் ஆடி அடங்குவர். கலியுகத்தின் முடிவில் சத்குருவும் உத்தம சீடர்களும் உருவாகி உலகை மாற்றுவர். இறுதியில் எல்லா உயிர்களும் கர்ம யோகத்தால் முக்தி பெறும்."

"சரபேஸ்வரரே! 'அர்கலம்' எனும் தாண்டவத்தின் லயமாகிய சித்திரை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் லக்னமும், ஸ்வாதி நான்காம் பாதத்தில் சூரியனும், அனுஷம் இரண்டாம் பாதத்தில் சுக்கிரனும் புதனும் சேர்ந்திருக்க, பரணி நான்காம் பாதத்தில் சந்திரனும், உத்திரம் முதல் பாதத்தில் சனியும் செவ்வாயும் சேர்ந்திருக்க, உத்திரம் இரண்டாம் பாதத்தில் குருவும் அமர்ந்திருக்கும் அமைப்பைப் பெற்ற இந்த ஜாதகரின் கர்மப்பலனைத் தாங்கள் விளக்க வேண்டும்" என்று திருநெல்வாயல் எனும் திருத்தலத்தில் அருள்புரியும் ஸ்ரீ உச்சிநாதேஸ்வரரை அன்னை கனகாம்பிகை வேண்டிப் பணிந்தாள்.

இதுவரை ஜோதிட உலகிற்கு அறிமுகமாகாத புதிய தொடர்!

AUG16-RK

நாடி ரகசியம்

1. சித்திரை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சூரியனும், ரேவதி நான்காம் பாதத்தில் குருவும் அமைந்தால் பொறியியல் துறையில் சிறப்பு உண்டாகும்.

2. சித்திரை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சுக்கிரனும், ரோகிணி இரண்டாம் பாதத்தில் சந்திரனும் அமைந்தால் ஜாதகர் சுயசம்பாத்தியத்தில் தன் ஆசைகளை முழுமையாகப் பூர்த்திசெய்து கொள்வார்.

3. சித்திரை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் செவ்வாயும், ரேவதி நான்காம் பாதத்தில் சூரியனும் அமையும் ஜாதகர் அடிக்கடி நோய்வாய்ப்படுவார்.

கேள்வி: தகுதியுள்ளவர்கள் தங்கள் முயற்சியால் முன்னேறுவது இயல்பே. சில நேரங்களில் தகுதியில்லாதவர்களும் உயர்வடைவதன் காரணமென்ன? பரிகாரங்களால் பயன் உண்டாகுமா என்பதை 'கந்தர்வ நாடி'யின் மூலம் விளக்கமுடியுமா?

பதில்: பட்டம், காற்றினால் பறக்கிறது. பறவை காற்றில் பறக்கிறது. இதன் வேற்றுமை உருபுகளை அறிந்தால் விதியை அறியலாம். காற்றின் வேகத்தால் கோபுரத்தின் உச்சியை அடையும் காகிதம், நெடுநேரம் அங்கு நிலைத்திருப்பதில்லை. காற்றே விதி. அதையே நாம் அதிர்ஷ்டக்காற்று என்று சொல்கிறோம். சந்திரனும், லக்னமும் உபஜெய ராசிகளைத் தொடர்புகொண்டால் (3, 6, 10, 11) தகுதி இல்லாதவர்களும் தற்காலிக உயர்வை அடைவார்கள். சூரியனும், லக்னமும் உபஜெய ராசிகளைத் தொடர்புகொண்டால், தங்கள் திறமையால் நிரந்தர உயர்வைப் பெறுவார்கள். சூரியன் சர ராசியிலும், சந்திரன் ஸ்திர ராசியிலும் அமையப்பெற்றவர்கள் வாழ்வில் எதிர்பாராத ஏற்ற- இறக்கங்களைச் சந்திப்பார்கள். பாய்மரக் கப்பலில், காற்றின் திசைக்கேற்ப பாய்மரத்தை மாற்றிக்கட்டி, பயணத்தைத் தடுக்கும் காற்றைத் தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்வதுபோல், சரியான நாள், யோகம், ஹோரைகளில் செய்யும் பரிகாரங்களால் நல்ல பலன்களை அடையமுடியும் என்பதே 'கந்தர்வ நாடி'யின் கருத்து.

t.me/Free_eMagazine

லால்குடி கோபாலகிருஷ்ணன்

ஐயாறப்பர் உரைத்தது- "திரிலோசனியே! இந்த ஜாதகன் முற்பிறவியில் கௌதமன் எனும் பெயருடன், உத்ரகாசி என்ற ஊரில் வாழ்ந்து வந்தான். அவன் முரட்டு குணத்தினனாய், பெரியோர் சொல் கேளாமல், 'முடத்தெங்கு' போல் வளர்ந்தான். மேலோர் யாவரும் அவனைக் கண்டு அஞ்சி நடுங்கினர். திட்டிவிடம் போன்ற சொல்லால் பனங்கருக்காய் பாதித்தான். தன் தந்தை சொல்லை உதாசீனம் செய்து, தீயோர் நட்பில் அகமகிழ்ந்தான். தந்தையின் செல்வத்தை அபகரித்து, அவரை இல்லத்தினின்று புறந்தள்ளினான். தீராத நோயில் சிக்கினான். அவன் மூச்சுக்காற்று முற்றுப் பெற்றது. அவன் பூதவுடலைத் தன் பிரேத ரூபத்தால் கண்டு வருந்தினான். கனலும், காயும் சினமும் மிக்க எமதூதர்களிடம் சிறைப்



பட்டு, எண்பத்தாறாயிரம் காத தூரம் கடந்து எமபுரியை அடைந்தான். பெரியோரையும் பெற்றோரையும் துன்புறுத்தியவர்களை வதைக்கும் 'காலசூத்திரம்' எனும் நரகத்தில் இறங்கினான். பல்லாண்டுகள் துன்பத்தை அனுபவித்தபின் நரகவாசத்தை முடித்துக்கொண்டு, பூவுலகம் நோக்கிப் புறப்பட்டான். ஜனகபுரி எனும் ஊரில் ஒரு வேதியர் குடும்பத்தில் பிறந்தான். அவன் தந்தை அவனுக்கு வேதம் பயிற்றுவிக்க எண்ணினார். ஒரு ஸ்ரவண பௌர்ணமியில் அவன் குருகுலம் ஏகினான். முற்பிறவியில் பெரியோரிடம் சுடுசொல்லை உதிர்த்த வாயில் வேதம் புகுந்து மாசுபடுவதை ஏற்காத தர்மதேவதை அவன் முயற்சியைத் தடுத்தாள். வேதமே தர்மத்தை ரக்ஷிப்பதால், தர்மம் வேதத்தைக் காத்தது. அவன் நாவில் கழலை நோய் கண்டது. அதனால் வேதனையுற்று வாடுகின்றான்.* நசிகேதன் போல, தந்தையின் சொல்லே மந்திரம் என்ற தர்மத்தின் விதியைக் கடைப்பிடித்திருந்தால் இந்த கதி நேர்ந்திருக்காது. தனக்கு உயிர் தந்த ஆதிகுருவாகிய தந்தைக்கு பாதகம் செய்தவனுக்கு பாவ விமோசனமே கிடையாது.

* நசிகேதன்- தன் தந்தையின் சொல் கேட்டு யாகத்தீயில் நுழைந்து தியாகம் செய்ததால், அவனை எமதர்மனே வணங்கும் பேறு பெற்றான். (கடோ உபநிடதம்).

(வளரும்)

செல்: 63819 58636

AUG16-RIL



12 லக்னப் பலன்கள்!

துலா லக்னத்தில் பிறந்தவர்களில் 2-ஆம் பாவம்வரை சென்ற இதழ்களில் பார்த்தோம். இனி, மற்ற பாவங்கள் பற்றிக் காண்போம்.

3-ஆம் பாவம்

ஜென்ம லக்னத்திற்கு 3-ஆம் வீடு முயற்சி ஸ்தான மாகும். இதைக்கொண்டு இளைய உடன்பிறப்பு, தைரியம், துணிவைப் பற்றி அறியலாம்.

துலா லக்னத்திற்கு 3-ஆம் வீட்டதிபதியான குரு கேந்திர, திரிகோணத்தில் அமையப்பெற்றாலும், செவ்வாய் வீடான மேஷம், விருச்சிகம் மற்றும் சூரியன் வீடான சிம்மத்தில் அமையப்பெற்றாலும், குரு- சூரியன், செவ்வாய் சேர்க்கை பெற்று அமையப்பெற்றாலும் சிறப்பான ஆண் உடன்பிறப்பும், அவர்களின்மூலம் உன்னத உயர்வும் உண்டாகும். குரு- சுக்கிரன், சந்திரன் சேர்க்கை பெற்று அமையப்பெற்றாலும், 3-ஆம் வீட்டில் சுக்கிரன், சந்திரன் வலுவாக அமையப்பெற்றாலும் வலுவான சகோதரி யோகம் உண்டாகும்.



3-ஆம் வீட்டில் சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் அமையப்பெற்று, 3-ஆம் அதிபதியான குருவும், செவ்வாயும் பகை, நீசம் பெறுவதும், அஸ்தங்கம் பெறுவதும், வக்ரம் பெறுவதும் சகோதர, சகோதரிவழியில் தோஷத்தை உண்டாக்கும்.

3-ஆம் பாவம் முயற்சி ஸ்தானம் ஆகும். உபஜய ஸ்தானமான 3-ஆம் வீட்டில் பாவகிரங்கள் அமையப் பெறுவது ஒருவகையில் சகோதர தோஷத்தையும், காதுகளில் பாதிப் பையும் ஏற்படுத்தும் என்றாலும், எடுக்கின்ற முயற்சியில் வெற்றி, சொந்த முயற்சியால் அனுகூலம், தைரியம், துணிவை ஏற்படுத்தும். 3-ஆம் வீட்டில் குரு தனித்து அமைவது சிறப்பல்ல. ஏதாவது ஒரு கிரகச் சேர்க்கையுடன் இருப் பதுதான் உன்னத அமைப்பாகும்.

4-ஆம் பாவம்

ஜென்ம லக்னத்திற்கு 4-ஆம் பாவத்தைக்கொண்டு தாய், வீடு, வாகனம், கல்வி யோகத்தைப் பற்றி அறியலாம்.

துலா லக்னத்திற்கு 4-ஆம் அதிபதி சனி ஆட்சி, உச்சம் பெற் றாலும், கேந்திர, திரிகோணங்களில் சுபர் சேர்க்கை மற்றும் சுபர் பார்வை பெற்றிருந்தாலும் தாய்க்கு நீண்ட ஆயுள் உண்டாகும். தாய்க்காரகன் சந்திரன் கேந்திர, திரிகோணங்களில் அமையப்பெற்றாலும், ஆட்சி, உச்சம் பெற்றாலும் தாய்க்கு நீண்ட ஆயுள் உண்டாகும். சனி, சந்திரன் பலமிழக்காமல் இருப்பது தாய்க்கு அனுகூலத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். சனி பலமிழப்பதும், வக்ரம் பெறுவதும், சனி நின்ற வீட்டிற்கு 4-ஆம் அதிபதி பலமிழப்பதும் தாய்வழியில் சாதகமற்ற பலனை உண்டாக்கும். 4-ஆம் வீட்டில் ராகு, கேது அமை வதும், சந்திரனின் வீடான கடகத்தில் சனி, ராகு போன்ற கிரகங்கள் அமைவதும் தாய்க்கு நல்லதல்ல.

4-ஆம் வீட்டைக் கொண்டு அசையா சொத்து

முனைவர் முருகு பாலமுருகன்

AUG16-RIL

யோகத்தைப் பற்றித் தெளிவாகக் கூறலாம். சனி, லக்னாதிபதி சுக்கிரன் சேர்க்கை பெற்றோ, புதன் சேர்க்கை பெற்றோ இருந்தால் வீடு, வாகன யோகம் பலமாக அமையும். சனி- சுக்கிரன் சேர்க்கை பெற்று பலம்பெற்றால், மாளிகை போன்ற வீடு உண்டாகும். சனி- செவ்வாய் சேர்க்கை பெற்று சுபர் பார்வையுடன் இருந்தாலும், 4-ஆம் வீட்டில் செவ்வாய் அமையப்பெற்றாலும் பூமி யோகம், மனை யோகம் உண்டாகும். சனி- புதன் சேர்க்கை வாகன யோகத்தை பலப்படுத்தும்.

சனி பலமிழந்தோ வக்ரம் பெற்றோ ராகு, சூரியன் போன்ற கிரகச் சேர்க்கை பெற்றால் அசையா சொத்து உண்டாக இடையூறுகள் உண்டாகும். சனி பலம்பெற்று அமையப்பெற்றால் பழைய வீடு, பழைய வாகனங்களை வாங்கிப் பயன்படுத்தும் வாய்ப்பு உண்டாகும். சனி- சுக்கிரன் இணைந்து பலம்பெற்றால் நான்கு சக்கர வாகனம் வாங்கும் அமைப்பு ஏற்படும். சந்திரன், சனி இணைந்து பலம்பெற்றால் வீடு, வாகன யோகம் உண்டாகும். சுக்கிரன் பலமிழந்து பாவிகள் சேர்க்கை பெற்றால் வாகனங்கள் உண்டாக இடையூறு ஏற்படும். சந்திரன் பலமாகி குரு போன்ற சுபகிரகங்கள் பார்வை பெற்றிருந்தால், தாய்வழியில் அசையா சொத்து யோகமும், வாகன யோகமும் உண்டாகும். சனி பலம் பெற்று சுக்கிரன், புதன் சேர்க்கையோ, சுக்கிரன், புதன் வீட்டிலோ அமையப்பெற்று, சனி தசை வந்தால் அசையா சொத்து யோகம் தங்குதடையின்றி வந்துசேரும்.

4-ஆம் அதிபதி சனியும், கல்விக்காரகன் புதனும் பலமாக அமையப்பெற்றால், நல்ல அறிவாற்றல், கல்வியில் நிறைய சாதனை செய்யக்கூடிய அமைப்பு, கல்வியால் பெயர், புகழ் அடையும் அமைப்பு உண்டாகும். சனியும், சனிக்கு 4-ஆம் அதிபதியும், புதனும், லக்னாதிபதியும் பலம்பெற்றிருந்தால் பலவிதத் தொழில்களைக் கற்று வித்தகராகும் வாய்ப்பு உண்டாகும்.

4-ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்கள் அமையப்பெற்றால், கற்ற கல்விமூலம் நல்ல நிர்வாகத் திறனுடன் உயர்பதவிகளை வகிக்கக்கூடிய யோகம் உண்டாகும். சனி- செவ்வாய் சேர்க்கை பெற்றால் பொறியியல், தொழில்நுட்பம் தொடர்புடைய கல்வி, 4-ல் சந்திரன், கேது அமையப் பெற்றால் மருந்து, ரசாயனம், கடல் சார்ந்த கல்வி, சனி- புதன் சேர்க்கை பெற்றால் கணக்கு, கம்ப்யூட்டர், பங்குச் சந்தை சார்ந்த கல்வி, 4-ல் குரு, சுக்கிரன் அமையப்பெற்றால் கலை, இலக்கியம், இசை, வேதங்கள் தொடர்புடைய கல்வி, சந்திரன், புதன், கேது, சனி இணைந்து 4-ல் இருந்தால் கணிதம், வியாபாரத் தொடர்புடைய கல்வி, செவ்வாய்- ராகு 4-ல் அமையப்பெற்றால் மருந்து, ரசாயனம், அந்நிய மொழிகளில் நாட்டம் உண்டாகும். 4-ஆம் வீட்டில் சந்திரன், சுக்கிரன் அமையப்பெற்றால் இசை, சங்கீதம் போன்றவற்றில் ஈடுபாடு ஏற்படும். 4-ஆம் வீட்டில் சந்திரன், சனி அமையப்பெற்றால் உணவுவகை, கடல்சார்ந்த கல்வி, சந்திரன், ராகு இருந்தால் ரசாயனம் தொடர்புடைய கல்வி யோகம் உண்டாகும்.

5-ஆம் பாவம்

ஜென்ம லக்னத்திற்கு 5-ஆம் பாவத்தைக் கொண்டு உயர்கல்வி, பூர்வீக சொத்துகள், புத்திர பாக்கியம் போன்றவற்றைப் பற்றி அறியலாம்.

t.me/Free_eMagazine

துலா லக்னத்திற்கு 5-ஆம் அதிபதி சனி ஆட்சி, உச்சம் பெற்றாலும், தனக்கு நட்பு கிரகமான சுக்கிரன், புதன் சேர்க்கை பெற்று கேந்திர, திரிகோணங்களில் பலமாக அமையப்பெற்றாலும் பூர்வீகவழியில் சொத்துகள் சேரும். சனி 7-ல் நீசம், வக்ரம் பெற்றாலும், சூரியனின் வீடான சிம்மத்தில் அமையப்பெற்றாலும், விருச்சிகத்தில் அமையப்பெற்றாலும், 5-ல் செவ்வாய், சூரியன், ராகு போன்ற பாவிகள் அமையப்பெற்றாலும் பூர்வீகவழியில் அனுகூலமற்ற பலனை உண்டாக்கும். 5-ல் செவ்வாய், ராகு அமையப் பெறுவது, சனி, ராகு, செவ்வாய் போன்ற பாவிகள் சேர்க்கை பெறுவது வாழ்வில் நிறைய பகைமையை ஏற்படுத்தும்.

சனி ஆட்சி, உச்சம் பெற்றாலும், கல்விக் காரகன் புதன் சேர்க்கை பெற்றாலும், 5-ஆம் வீட்டை சுபகிரகங்கள் பார்வை செய்தாலும் நல்ல அறிவாற்றல், உயர்கல்விமூலம் அனுகூலங்கள், உயர்கல்வியில் சாதனை செய்யும் அமைப்பு உண்டாகும்.

5-ஆம் வீடு புத்திர ஸ்தானம் என்பதால், சனி பலமுடன் அமையப்பெற்று, புத்திரகாரகன் குருவும் பலமுடன் அமையப் பெற்று, சனிக்கு 5-ஆம் அதிபதியும் பலமுடன் அமையப்

AUG16-RIL

பெற்றால், சிறப்பான புத்திர பாக்கியம், புத்திரவழியில் சிறப்பு, ஏற்றம், உயர்வு உண்டாகும். சனி பலமிழக்காமல், புத்திர காரகன் குரு, ஆண் கிரகங்களான சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்கள் 5-ல் வலிமையுடன் அமையப்பெற்றாலும் ஆண் புத்திர பாக்கியம் உண்டாகும்.

சனி பலம்பெற்று, 5-ஆம் வீட்டில் பெண் கிரகங்களான சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் அமையப்பெற்றால், பெண் குழந்தை யோகம் உண்டாகும். 5-ஆம் வீட்டில் ஆண், பெண் கிரகங்கள் அமையப் பெற்றிருந்தாலும், சனி ஆண், பெண் கிரகச் சேர்க்கை மற்றும் பார்வை பெற்றிருந்தாலும் ஆண், பெண் புத்திர பாக்கியம் உண்டாகும்.

புத்திர ஸ்தானமான 5-ஆம் வீட்டில் ராகு- கேது, புதன் அமையப்பெற்றாலும், சனி- மேஷம், மிதுனம், சிம்மத்தில் அமையப்பெற்றாலும், வக்ரம் பெற்றாலும் புத்திர தோஷம் உண்டாகும். சனி- ராகு, கேது, புதன் சேர்க்கை பெறுவது சிறப்பல்ல. புத்திரகாரகன் குரு பலமாக அமையப் பெறுவது அனுகூலத்தை உண்டாக்கும். குரு பாவிகள் சேர்க்கை பெற்றாலும், வக்ரம் பெற்றாலும், குருவின் வீடான தனுசு, மீனத்தில் பாவிகள் அமையப்பெற்றாலும் புத்திரர்களால் அனுகூலமற்ற பலன்கள் உண்டாகும்.

சனி, இரு பாவிகளுக்கிடையே இருப்பதும், பகை, நீச வீட்டில் அமையப்பெறுவதும், சனி பலமிழந்து ராகு- கேது, புதன் சேர்க்கை பெறுவதும் புத்திர தோஷமாகும். சனி பலம்பெற்று புதன், ராகு சேர்க்கை பெற்றால் தத்துப் புத்திர யோகம் உண்டாகும்.

6-ஆம் பாவம்

ஜென்ம லக்னத்திற்கு 6-ஆம் வீட்டைக் கொண்டு ருண, ரோகம், பகை, கடன், சிறை செல்லும் அமைப்பு போன்றவற்றைத் தெளிவாக அறியலாம்.

துலா லக்னத்திற்கு குரு 6-ஆம் அதிபதி. 6-ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்கள் அமையப்பெற்றாலும், குரு பலமிழந்து, சூரியன் சேர்க்கை பெற்று 6, 8, 12-ல் இருந்தாலும் உஷ்ணநோய்கள், கண்களில் பாதிப்பு உண்டாகும். 6, 8, 12-ல் குரு, சந்திரன் இணைந்திருந்தால் நீர்த்தொடர்புள்ள பாதிப்புகள் உண்டாகும். குரு 6-ஆம் அதிபதி என்பதால், வலுவிழந்தால் குடலிறக்கம், வாயுத் தொல்லைகள், வயிறு பாதிப்பு ஆகியவை உண்டாகும். குரு, சுக்கிரன் இணைந்து பலமிழந்து காணப்பட்டால் ரகசிய நோய்கள் உண்டாகும். குரு, சனி இணைந்து, பலமிழந்து, மறைந்து காணப்பட்டால் பித்தம், வாதம், எலும்பு சம்பந்தபட்ட பாதிப்புகள் உண்டாகும். ராகு, பாவிகள் சேர்க்கை பெற்று 6, 8-ல் இருந்தால் ரணம், ரத்த சம்பந்தப்பட்ட பாதிப்பு, தோல் சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உண்டாகும். குரு 6, 8-ஆம் வீட்டைப் பார்வை செய்தாலும், 6, 8-ல் உள்ள பாவகிரகங்களைப் பார்வை செய்தாலும் சிறுசிறு நோய்கள் ஏற்பட்டாலும் நிவர்த்தியாகக்கூடிய நிலை உண்டாகும்.

6-ஆம் வீட்டை சனி போன்ற பாவிகள் பார்வை செய்தால், தேவையில்லாத எதிர்ப்புகள் நிலவும். 6-ஆம் வீட்டில் சனி, ராகு போன்ற கிரகங்கள் அமையப்பெற்றால், எதையும் எதிர்கொள்ளக்கூடிய வலிமை உண்டாகும். பாவிகள் பார்வை 6-ஆம் வீட்டிற்கு இருப்பது எதிர்ப்புகளை அதிகரிக்கும். சனி, ராகு 6-ல் அமையப்பெற்று, சுபர் பார்வையின்றி அமைந்து உடன் குருவும் பலமிழந்திருந்தால், சில சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடிய அமைப்பு, தேவையில்லாத எதிர்ப்புகளை சந்திக்கும் நிலை உண்டாகும். குரு, சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் சேர்க்கை பெற்று 6, 8, 12-ல் அமையப்பெற்றால் நோய்கள் உண்டாகும்.

குரு- சனி, ராகு போன்ற கிரகச் சேர்க்கை பெற்று, வலுவிழந்து 3, 6, 8, 12-ல் அமையப்பெற்றால், அரசாங்க தண்டனைக்கு ஆளாகக்கூடிய நிலை உண்டாகும். குரு பாவிகள் சேர்க்கைப் பெற்று, பாவிகளுக்கிடையே அமையப்பெற்று வலுவிழந்திருந்தால் பலவகை மனக்கஷ்டம், வம்பு, வழக்குகள், விரோதங்கள் ஏற்படும். 6, 8-ல் சனி, செவ்வாய் சேர்க்கை ஏற்பட்டால்- உடன் குரு பலமிழந்து காணப்பட்டால் பகைவர்களால் ரணம், பலவகை துன்பங்கள் உண்டாகும்.

குரு- சனி, ராகு போன்ற கிரகச்சேர்க்கை பெற்றால், பலவகை வம்பு, வழக்குகள், பொருட்சேதம் ஏற்படும். குரு பலமிழந்து சனி, ராகு, சூரியன் போன்ற கிரகச்சேர்க்கை பெற்றால், கடன்களால் நிம்மதியற்ற நிலை, சனி பலமிழந்தால் வாழ்வின் பிரதான காலத்தில் கடன் வாங்கும் நிலை உண்டாகும்.


(மற்ற பாவங்கள் அடுத்த இதழில்)

செல்: 72001 63001

t.me/Free_eMagazine
AUG16-RIL

செவ்வாய், சனியின் ஒருமித்த பார்வை என்ன செய்யும்?

ஆர். மகாலட்சுமி



சென்ற இதழ் தொடர்ச்சி...

எந்த லக்னமானாலும் 8-ல் செவ்வாய், 9-ல் சனி நின்று பார்க்கும் பலன்...

செவ்வாய் 8-ஆமிடத்தில் நின்று தனது நான்காம் பார்வையால் 11-ஆமிடத்தையும், சனி 9-ல் நின்று தனது மூன்றாம் பார்வையால் 11-ஆம் இடத்தையும் நோக்குகிறார்கள்.

11-ஆமிடப் பார்வைப் பலன்கள்

மூத்த சகோதரருடன் எப்போதும் சொத்துச் சண்டை வரும். வீடு, மனை வாங்கப் போட்டுள்ள திட்டங்கள் சற்று குளறுபடியாகும். ஆராய்ச்சிக் கல்வியை முடித்துப் பட்டம் வாங்குவதற்குள் பெரும் கஷ்டம் வரும். பதவி சம்பந்தமாக வழக்கு தொடுத்தால், அது அடுத்த ஜென்மத்திலும் முடியுமா என்பது கேள்விக்குறிதான். உணவகம் நடத்துகிறவர்கள், இடவசதிக் குறைபாடு, வேலையாட்கள் தொல்லை, வீண் வதந்தி இவற்றால் அவ்வப்போது நெருடலை சந்திப்பார்கள்.

11-ஆமிடம் லாப ஸ்தானம். இவ்விரு பாவர்களும் சேர்ந்து லாபத்தை, 'வரும்; ஆனா வராது' என்ற நிலைக்குக் கொண்டுவந்துவிடுவர்.

பரிகாரங்கள்

அதிக எதிர்பார்ப்புகள் கூடாது.

பைரவருக்கு எலுமிச்சையில் நல்லெண்ணெய் ஊற்றி, 22 மிளகை கருநீலநிறத் துணியில் பொட்டலம் கட்டி. கருநீலத் திரிபோட்டு தீபமேற்றவும்.

திருநள்ளாறு சனீஸ்வரரையும், தர்ப்பாரண்யேஸ்வரரையும் நன்கு வழிபடவும்.

பைரவருக்கு முந்திரி வைத்து வணங்கவும்.

பழனி முருகரை வணங்கி, சித்தரையும் வணங்கிவரவும்.

சமையல் தொழிலாளிக்கு உதவவும்.

செவ்வாய் 8-லிருந்து தனது எட்டாம் பார்வையால் 3-ஆமிடத்தையும், சனி 9-லிருந்து தனது ஏழாம் பார்வையால் 3-ஆமிடத்தையும் நோக்குவர்.

3-ஆமிடப் பார்வைப் பலன்கள்

3-ஆமிடம் வீரம், மனவுறுதியைக் குறிக்கும்.

t.me/
AUG16-RH

ஒன்று, இந்த இருகிரகப் பார்வைகளும் சேர்ந்து ஜாதகரைக் கோழையாக்கிவிடக் கூடும். அல்லது செவ்வாயின் 8-ஆம் பார்வை, ஜாதகரை அதிக முட்டாள்தனமாக கோபப் படுத்த, சனி தனது பார்வைமூலம் அடி வாங்கிக் கொடுக்கவும் கூடும். இந்த இரு பார்வைகளும் சேர்ந்து அநியாயமாக வம்பு பேசுவது, கோள் சொல்லி சண்டை மூட்டிவிடுவது, இரண்டு பேருக்கிடையே யுத்தம் ஆரம்பிக்கச் செய்வது, மொட்டைக்கடுதாசி எழுதி நான்குபேர் வாழ்க் கையை நாசமாக்குவது போன்ற இன்னபிற ரகசிய வேலைகளை ஜாதகரைச் செய்ய வைக்கும். செவ்வாயின் எட்டாம் பார்வை 3-ஆம் வீட்டில் பரவுவதால், எதிரிகளை சற்றே கிலி ஏற்படுத்தச் செய்யும்.

பரிகாரங்கள்

ஜாதகரைச் சுற்றியுள்ளவர்கள், தங்களது குலதெய்வம், இஷ்டதெய்வத்தை நன்கு வேண்டிக்கொள்ளவும். அப்போதுதான் இதுபோன்ற ஆட்களிடமிருந்து தப்பிக்க முடியும்.

இத்தகைய அமைப்புடைய ஜாதகர்களை ஒரு தெருவில் பார்த்தால், அடுத்த தெருவழியாக ஓடிவிடுவது நல்லது.

எந்த லக்னாமாயினும் செவ்வாய் 9-லும் சனி 10-லும் அமர்ந்த பலன்...

செவ்வாய் 9-ல் நின்றும், சனி 10-ல் நின்றும் 12-ஆமிடம், 4-ஆமிடத்தைக் காண்பர்.

செவ்வாய் 9-ல் இருந்து தனது நான்காம் பார்வையால் 12-ஆமிடத்தைப் பார்ப்பார். சனி 10-ல் நின்று தனது மூன்றாம் பார்வை யால் 12-ஆமிடத்தைக் காண்பார்.

12-ஆமிடப் பார்வைப் பலன்கள்

12-ஆமிடம் என்பது விரய ஸ்தானம். வெளிநாட்டுப் பயணங்கள் எளிதாகக் கைகூடி வராது. வெளிமாநிலப் பயணங்களும் காலை வாரும். பக்கத்து ஊருக்குப் போவ தற்கே பத்து முறை அல்லாட வேண்டி யிருக்கும். 'கூரை ஏறி கோழி பிடிக்க முடியா தவன் வானம் ஏறி வைகுந்தம் போன' கதைதான். கோவில் குளம் பார்க்க நினைத் தாலும், வெளிநாட்டில் போய் நாலு காசு சம்பாதிக்கலாம் என நினைத்தாலும் ஒன்றும் சரிவராது. பயணம் என்று சொன்னாலே செவ்வாயும் சனியும் கட்டை யைப் போட்டுவிடுவார்கள். விரயமும் ஆகாது. அதுசரி; நாலு இடத்துக்குப் போய் நானாவிதமாகப் பார்த்தால்தானே செல வென்ற ஒன்று ஆகும். அல்லது வெளிநாடு, வெளியூர் போய் நாலு காசு சம்பாதித் தால் அதைக்கொண்டு பெருமைக்காக வாவது செலவு செய்யலாம். இங்குதான் எதற்கும் வழியில்லையே! செலவு என்ற ஒரு அயிட்டம் வாழ்க்கையில் கிடையவே கிடையாது. இரு பாவரின் பார்வை சிலசமயம் வேண்டாத செலவுகளைக் கொடுத்துவிடும். சுபர்கள் 12-ஆமிடத்தைப் பார்த்து, 12-ஆம் அதிபதியும் நன்கு அமைந்தால் நிலைமை சுமாராக அமையும்.

பரிகாரங்கள்

தொழில் விஷயமாக வெளிநாடு செல்லவிரும்பினால், ஞாயிற்றுக்கிழ மைகளில் பைரவருக்கு மஞ்சள் வஸ்திரம் சாற்றி, முந்திரி இனிப்பு படைத்து, அகலில் நெய்விட்டு, மஞ்சள் துணியில் 21 மிளகைப் பொட்டலம் கட்டி, மஞ்சள் திரிபோட்டு தீபமேற்றவும்.

உள்ளூரிலுள்ள தெய்வத்தை முதலில் நன்கு வணங்கவும்.

ஜாதகத்தில் 12-ஆமிடம் சுப சம்பந்தம் பெற்றால் மட்டுமே வெளிநாட்டு வேலைக்கு முயற்சிக்கவும். இல்லாவிடில் வெளிநாடு போய் வெகு சிரமம்படவேண்டி வந்து விடும். சிவபெருமானை வணங்கவும்.

செவ்வாய் 9-லிருந்து தனது 8-ஆம் பார்வையாலும், சனி 10-ஆம் இடத்திலி ருந்து தனது 7-ஆம் பார்வையாலும் 4-ஆம் வீட்டைக் காண்கிறார்கள்.

4-ஆமிடப் பார்வைப் பலன்கள்

4-ஆமிடம் எனும் தாய் ஸ்தானத்தை, இருபாவர்களும் ஒருசேர நோக்குவதால், தாயின் உடல்நிலை சீராக இராது. ஒன்று எங்காவது அடிபட்டுக்கொள்வார். அல்லது நோயின் தாக்கம் இருந்துகொண்டே இருக்கும். தொடக்கக் கல்வியை நல்லபடியாக முடிப்பது சற்று சந்தேகம்தான்.

t.me/Free_eMagazine
AUG16-RIL

4-ஆமிடம் சுகத்தைக் குறிக்கும். எனவே இவர்களுக்கே எப்போதும் நோய்த் தாக்கமும் அவ்வப்போது காயம் ஏற்படுவதும் நடக்கும்.

வாகனத்தில் போகும்போது, வாகனம் அங்கங்கே நெளிந்துவிடும். தரையில் சிந்தியுள்ள எண்ணெய் வழுக்கி விழுந்து விடுவார்கள். இது அவ்வபோது நடக்கும். அடுத்தவர் மனை, வீடு ஆகியவற்றை ஆட்டையைப் போட ஆசை ஆசையாக வரும். இவர்களது பூர்வீக சொத்தை விற்பது சம்பந்தமாக உடன் பிறந்தோருடனும், தாயுடனும் சண்டை போடுவார்கள். பள்ளி, கல்லூரிக்கு அனுப்பினால் அங்கு சிலர் வாத்தியாரை அடித்துவிட்டு வந்துவிடுவர். நான்காம் வீட்டை செவ்வாய் தனது 8-ஆம் பார்வையால் பார்க்கும்போது, 4-ஆமிடம் சம்பந்தமான காரகங்களையும், காரகர் களையும் ரத்தம் சிந்த வைத்துவிடும்.

பரிகாரங்கள்

பைரவருக்கு திங்கட்கிழமைதோறும் அகலில் நெய்விட்டு, 20 மிளகை சந்தனநிறத் துணியில் பொட்டலம் கட்டி, தாமரைத்தண்டு திரியில் விளக்கேற்றவும்.

சுசீந்திரம் சென்று தாணுமாலய சுவாமியை தரிசனம் செய்யவும்.

கடல், நீர் சார்ந்த இடங்களிலுள்ள முருகரை வணங்கவும்.

அடிக்கடி வரும் கோபம் குறைய, திருத்துறைப்பூண்டி அருகே இடும்பவனம் எனும் தலத்திலுள்ள சத்குணநாதர், மங்கள நாயகியை வணங்கவும்.

அடுத்தவர்களை மூர்க்கமாகத் தாக்கு வதைத் தவிர்க்கவும்.

செவ்வாய், சனி இருவரும் 4, 12-ஆம் இடங்களைப் பார்ப்பதால், 4-ஆமிட காரகங்களான தாய், வீடு, மனை, வாகனம், கல்வி, சொத்து போன்றவை கைநழுவ நேரிடும்.

எந்த லக்னாமாயினும் செவ்வாய் 10-லும் சனி 11-லும் இருக்கும் பலன்...

செவ்வாய் 10-லிருந்தும், சனி 11-லிருந்தும் லக்னத்தையும் 5-ஆமிடத்தையும் அவதானிப் பார்கள்.

செவ்வாய் 10-லிருந்து தனது நான்காம் பார்வையாலும், சனி 11-லிருந்து தனது மூன்றாம் பார்வையாலும் லக்னத்தை கவனிப்பர்.

லக்ன பார்வைப் பலன்

லக்னத்தை இரு பாவர்களும் ஒரே நேரத்தில் பார்வையிடும்போது, ஏதோ ஒன்றில்லாத இன்னொரு காரணத் தால், ஜாதகருக்கு கௌரவம் என்பதே இல்லாமல் போய்விடும். 'Take for Granted' எனும் நிலையில் இருப்பர். 'எடுப்பார் கைப்பிள்ளை'போல், ஒரு நிராதரவான நிலையில் இருப்பர். இவர்களின் யோசனை களை யாரும் செவிமடுக்க மாட்டார்கள்.என்ன சொன்னாலும் அது புறக்கணிக்கப்படும். 'உன க்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடு' என்ற சொற்கள் இவர்களை எப்போதும் சுற்றி நிற்கும். சுகம், பெருமை எதுவும் கிடைக்காது. இந்த உலகத்தில் நாம் பிறந்ததே தண்டம் என்ற எண்ணத்திற்குத் தள்ளப்படுவர். இவர்கள் என்ன முயற்சித்தாலும் அது நடக்காது.

பரிகாரங்கள்

t.me/Free_eMagazine

உங்கள் ஊரிலுள்ள சிவனையும் அம்பாளையும் நன்கு வணங்கவும்.

அப்படியே காலபைரவரையும் வணங்கவும்.

உங்களால் முடிந்த அதிகபட்ச உழவாரப் பணி செய்யவும்.

குளங்களை, ஏரி, வாய்க்கால்களை சுத்தம் செய்யவும்.

நீங்கள் பணம் செலவழித்து பரிகாரம் செய்ய அவ்வளவாக இயலாது. இறைவன் நீங்கள் எவ்வளவு செலவுசெய்து பரிகாரம் செய்கிறீர்கள் என்பதைக் குறித்துக்கொள்ள மாட்டார். எவ்வளவு மனத்தூய்மையுடன், நிறையுள்ளமாக கோவிலையும் குளத் தையும் சுத்தம் செய்கிறீர்களோ- அதுவே அவருக்கு பெருவிருப்பமான செயல். அதுவே போதும்.

உங்கள் லக்னாதிபதி ஓரளவு நல்ல நிலையில் இருப்பினும் வாழ்க்கை சுமாராக ஓடிவிடும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்...

செல்: 94449 61845

AUG16-RIL



ஜோதிடபானு 'அதிர்ஷ்டம்' சி.சுப்பிரமணியம் பதில்கள்

● சுதா, தஞ்சாவூர்.

என் பேரிலும், தம்பி பேரிலும் இரண்டு வீடு இருந்தும் வாடகை வீட்டில் வசிக்கிறோம். வீடுகள் பழுதடைந்து பயனில்லாமல் இருக்கின்றன. அதைக் கட்டலாமா? விற்றுவிடலாமா? வேறு வீடு வாங்கலாமா?

சுதாவுக்கு திருவாதிரை நட்சத்திரம், மிதுன ராசி, சிம்ம லக்னம். 2020 சனிப்பெயர்ச்சியின்போது மிதுன ராசிக்கு அட்டமச்சனி வருகிறது. தம்பிக்கு 2023 வரை ஏழரைச்சனி (தனுசு ராசி) நடக்கிறது. எனவே வீட்டை பழுது பார்ப்பதைவிட விற்பது நல்லது. சுதாவுக்கு அட்டமச்சனி வந்ததும் புது வீடு இடப்பெயர்ச்சி அமையும். தம்பிக்கு ஏழரைச்சனி முடியும்வரை கிரகநிலை அனுகூலமில்லை. அத்துடன் ராகு தசையும் நடக்கிறது. செயலற்ற நிலை. என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்.

● ராஜா, திருச்சி.

எனக்கு என்ன தொழில் ஏற்றது? அல்லது வேலை கிடைக்குமா? குடும்பத்தில் நிம்மதியில்லை. மனைவி, மக்களுடன் சந்தோஷமாக வாழ்வேனா?

ராஜாவுக்கு விருச்சிக ராசி, கேட்டை நட்சத்திரம். 2020 வரை (அடுத்த சனிப்பெயர்ச்சிவரை) ஏழரைச்சனி நடக்கிறது.

AUG16-RIL

அத்துடன் 38 வயதுமுதல் பத்து வருடம் சந்திர தசை- 48 வயதுவரை. (தற்போது 40 வயது நடப்பு). பொருட்சேதம், விபத்து, குடும்பப் பிரிவு- பிளவு, வைத்தியச்செலவு முதலிய பலன்களை சந்திக்கும் நிலை. திங்கட்கிழமைதோறும் சிவலிங்க அபிஷே கத்துக்குப் பால் வாங்கித் தரவேண்டும். முடிந்தால் ஒரு திங்கட்கிழமை சிவன் கோவிலில் ருத்ர ஜெபப் பாராயணம் செய்து, ருத்ர ஹோமம் வளர்த்து, சுவாமி- அம்பாளுக்கு ருத்ராபிஷேகம் செய்யலாம். அத்துடன் 45 மிளகை சிவப்புத்துணியில் பொட்டலம் கட்டி, காலபைரவர் சந்நிதியில் சனிக்கிழமைதோறும் நெய்யில் நனைத்து தீபமேற்ற வேண்டும். (சனிப்பெயர்ச்சிவரை). இவற்றைச் செய்தால் மலைபோல வரும் துன்பம் பனிபோல விலகலாம்.

● ப. சுந்தரம், கும்பகோணம்.

குருவே, வாழ வழிசொல்லுங்கள். சுயதொழிலில் லட்சக்கணக்கில் நஷ்டம்- கடன். உறவுகள் மதிப்பதில்லை. உறவினர், மனைவி, மகள், மகன் ஒதுங்கி நிற்கின் றனர். பத்து ஆண்டுகளாக பூர்வீக சொத்து விற்பனை செய்ய முடியவில்லை.

2018 ஏப்ரலில் பதில் சொன்னதாக ஞாபகம். அதைக் கடைப்பிடித்தீர்களா? 'இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்; செல்லாது அவன் வாய்ச்சொல்' என்று ஒரு புலவர் பாடியுள்ளார். கைப்பொருள் உள்ளானை எல்லாரும் சென்று எதிர்கொள்வர். ஒரு திரைப்படத்தில் சிவாஜி, 'போங்கடா போங்க- என் காலம் வெல்லும்- வென்ற பின்னே வாங்கடா வாங்க' என்று பாடுவார். அதுமாதரி 2024 வரை சுக்கிர தசை முடியட்டும். அதன்பிறகு உங்கள் காலம் வெல்லும். பொருள் சேரும். பொருள் சேர்ந்தால் உறவுகள் தேடிவரும். அதுவரை உங்கள் வழி தனி வழியாக இயங்கட்டும். வசதி இருந்தாலும் இல்லையென்றாலும் கடன்உடன் வாங்கியாவது காரைக்குடியில் சுந்தரம் குருக்களிடம் ஹோமம் செய்து கலச அபிஷேகம் செய்துகொள்ளுங்கள். எந்தப் பிரச்சினைக்கும் ஒரே தீர்வு அக்னி காரியம்தான். இதுதான் வாழும் வழி.

● கோமதி, திருச்சி.



பெரிய பையனுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும். வேலையில் நல்ல முன்னேற்றமும் சம்பளமும் வேண்டும். சின்னவனுக்கு லோன் கிடைத்து வீடு கட்ட வேண்டும். திருச்சியில் உள்ள வீடுகளை விற்கவேண்டும். கணவர் இறந்தபிறகு அவர் பெயரிலுள்ள வீட்டை விற்று இரு பையன்களுக்கும் கொடுத்துவிட்டேன். என் பேரிலும் வீடு உள்ளது. நல்ல விலைக்குப் போக வேண்டும்.

உங்களுடைய எல்லா 'வேண்டும்' என்ற வேண்டுதலுக்கு ஒருமுறை நேரில் வரவேண்டும். (முன்பதிவு செய்துவிட்டு வரவேண்டும்). எல்லா ஜாதகங்களையும் கொண்டுவர வேண்டும்.

● வரதராஜ செட்டியார், ஆற்காடு.

என் பேத்திக்கு ஜாதகம் எழுதித் தரும்படி வேண்டுகிறேன். விஜயதசமி யன்று பள்ளியில் சேர்க்கலாமா?

விஜயதசமியன்று பள்ளியில் சேர்ப்பது நல்லதுதான். நீங்கள் அனுப்பிய குறிப்பு வாசன் பஞ்சாங்கப்படி திருக்கணித முறையில் உள்ளது. இதை மதுரை கே.எம். சுந்தரம் வசம் வாக்கியப்படி கணித்து வாங்கவும். தொடர்புக்கு, செல்: 92453 28178. அப்பாஸ் காம்ப்ளக்ஸ், அண்ணாநகர் மெயின் ரோடு, (அம்பிகா காலேஜ் எதிர்புறம் மாடி) மதுரை-20.

● விசாலாட்சி, திருவனந்தபுரம்.

என் பெண் மீரா பொறியியல் மேற்படிப்பு படிக்கிறாள். படிப்பு, வேலை எதிலும் நாட்டமில்லை. உடல்நலத் திலும் பல பிரச்சினைகள். அவளை ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதவைக்கலாமா? (தகப் பனாரின் ஆவல்).

2019 டிசம்பரில் 23 வயது முடியும். திருவாதிரை நட்சத்திரம், மிதுன ராசி, கடக லக்னம். சனி தசை நடக்கிறது. 10-க்குடைய செவ்வாய் அம்சத்தில் உச்சம்! (உத்திராடம் 2-ஆம் பாதம்). எனவே அரசு உத்தியோகம்

t.me/Free_eMagazine
AUG16-RIL

சந்திராஷ்டம தினங்கள்

ரிஷபம்: *10-8-2019 பின்னிரவு 3.15 மணிமுதல் 13-8-2019 பகல் 11.45 மணிவரை சந்திராஷ்டமம். வேலையில் திருப்தியற்ற நிலை, தம்பதிகளுக்குள் சிறுசிறு கருத்து வேறுபாடு நிலவும். என்றாலும் பிரிவினைக்கு இடம் ஏற்படாது. வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்கலாம். சகோகரவழியில் உதவி கிட்டும். தனியார்துறை அலுவலர்களுக்கு வேலைப்பளு அதிகமாகக் காணப்படும். அரசுவகையில் எதிர்பாராத நற்பலன் உண்டாகும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலை மனதை வாட்டும். காலபைரவருக்கு மிளகுதீபம் ஏற்றவும்.*

மிதுனம்: *13-8-2019 பகல் 11.45 மணிமுதல் 15-8-2019 இரவு 10.30 மணிவரை சந்திராஷ்டமம். முயற்சிகளில் தேக்கம், பொருளாதாரத்தில் சிக்கல், கொடுக்கல்- வாங்கலில் பிரச்சினை போன்றவை ஏற்படலாம். உறவினர்களால் மனவருத்தம், கணவன்- மனைவிக்குள் சச்சரவு உருவாகலாம். திடீர்ப் பயணம் ஆதாயம் தரும். அலைச்சல் அதிகமாகும். புனிதத் தலங்களுக்குப் பயணம் செல்லும் வாய்ப்புகளும் ஏற்படும். தேகநலனில் அக்கறை காட்டுவது அவசியம். மருத்துவச் செலவுகள் வந்து விலகும். தன்வந்திரி மற்றும் சக்கரத்தாழ்வாரை வழிபடவும்.*

கடகம்: *15-8-2019 இரவு 10.30 மணிமுதல் 18-8-2019 காலை 10.00 மணிவரை சந்திராஷ்டமம். தொழில்துறையில் சில நல்ல திருப்பங்கள் உண்டாகும். திடீர் அனுகூலங்கள் உண்டாகும். உறவினர்கள் வகையில் சுபச்செலவுகள் ஏற்படும். வாகனத்தில் பழுது விரயங்களும் உண்டாகும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கருத்து வேறுபாடுகள் அகலும். எதிர்கால திட்டங்களை செயல்படுத்துவதில் சிறுசிறு தாமதங்கள் நேரும். தனியார் துறையில் பணிபுரிவோருக்கு பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். தட்சிணாமூர்த்தியை வழிபடவும்.*

t.me/Free eMagazine

சனி கேது			சந்திரன்
	திருவாதிரை ராகு தசை 1-2-21		ல
சூரியன் புதன் குரு	சுக்கிரன்		செவ் ராகு

உண்டு. ஐ.ஏ.எஸ். ஆக வாய்ப்புண்டு. 2020-ல் அட்டமத்துச் சனி வருவதால் ஹாஸ்டலில் தங்கிப்படிக்கலாம். முன்னதாக காரைக்குடியில் சுந்தரம் குருக்களைத் தொடர்புகொண்டு (செல்: 99942 74067) 19 வகையான ஹோமம் செய்து மீராவுக்கு கலச அபிஷேகம் செய்தால் படிப்பில் நாட்டமும் ஆர்வமும் முன்னேற்றமும் உண்டாகும். (செலவைப் பார்க்கக்கூடாது.)

● துரைசாமி, வீராய்ச்சிபாளையம்.

என் மகன் சேஷன் எம்.காம்., (சி.ஏ.) முடித்துள்ளான். எந்த வேலையும் இல்லை. வருமானமும் இல்லை. உடலிலும் உபாதைகள்- தாய்க்கும் பீடைகள். இவை எப்போது சரியாகும்? திருமணம் எப்போது நடக்கும்?

படிப்பு, வேலை, சம்பாத்தியம் வருவதற்கு முன்பே திருமணக் கனவு காணாதீர்கள். 27 வயதுதான் ஆகிறது. 2020-ல் சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு வேலை யோகம். 30 வயது முடிந்தபிறகு திருமண யோகம்.

● ஆர். பாலாஜி, உறையூர்.

எனக்கு எந்தமாதிரி பெண் ஜாதகம் தேடவேண்டும்? எப்போது திருமணம் கூடிவரும்? பரிகாரம் உண்டா?

27 வயது நடக்கிறது. நாக தோஷம் உண்டு. 30 வயதில்தான் திருமண யோகம். பரிகார விவரம் நேரில் அறியலாம்.

● ஜெயந்திமாலா, கோவை.

என் தோழியின் மகள் ரேஷ்மாவின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

படிப்பு, வேலை, எதிர்காலம் எல்லாம் தெளிவாக உள்ளது. 2014 ஜூன்முதல் ராகு தசை. 2022 வரை சனி புக்தி. இதில் வெளிநாட்டு யோகம், வேலை, சம்பாத்தியம் அமையும். 2022-க்குமேல் திருமணம். வெளிநாட்டு வரன் அமையும். ●

AUG16-RK

பஞ்சாங்க ஆன்மிகக் குறிப்புகள்

முருகு பாலமுருகன்

தேதி கிழமை	திதி	நட்சத்திரம்	அமிர்தாதி யோகம்	சூலம் பரிகாரம்	யோகினி	நாள்	ராகு காலம்	எம கண்டம்	நல்ல நேரம்	விரதம் விசேஷம்	செயல் குறிப்புகள்
11-8-19 ஆடி 26 ஞாயிறு	பகல் 2.03 வரை ஏகாதசி பின் (வ) துவாதசி	பின்னிரவு 3.54 வரை மூலம் பின் பூராடம்	பின்னிரவு 3.54 வரை அமிர்தயோகம் பின் சித்தயோகம்	மேற்கு, இனிப்பு	பகல் 2.03 வரை கிழக்கு பின் வடக்கு	நாள் முழுவதும் கீழ்நோக்கு நாள்	மாலை 4.30-6.00	காலை 12.00-1.30	காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 1.30-2.00 மாலை 4.00-4.30	ஏகாதசி விரதம். பெருமாள் வழிபாடு உத்தமம்.	சுபமுகூர்த்த நாள். சுபமுயற்சிகளைச் செய்ய ஏற்ற நாள். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம்.
12-8-19 ஆடி 27 திங்கள்	பகல் 2.24 வரை துவாதசி பின் (வ) திரயோதசி	பின்னிரவு 5.13 வரை பூராடம் பின் உத்திராடம்	பின்னிரவு 5.13 வரை சித்தயோகம் பின் மரணயோகம்	கிழக்கு, தயிர்.	பகல் 2.24 வரை வடக்கு பின் தென்கிழக்கு	பின்னிரவு 5.13 வரை கீழ் நோக்கு நாள் பின் மேல் நோக்கு நாள்	காலை 7.30-9.00	காலை 10.30-12.00	காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 12.00-2.00 மாலை 4.30-5.30	பிரதோஷ விரதம். சிவ வழிபாடு உத்தமம்.	ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம்.
13-8-19 ஆடி 28 செவ்வாய்	மாலை 3.14 வரை திரயோதசி பின் (வ) சதுர்த்தசி	நாள் முழுவதும் உத்திராடம்	நாள் முழுவதும் சித்தயோகம்	வடக்கு பால்	மாலை 3.14 வரை தென்கிழக்கு பின் தென்மேற்கு	நாள் முழுவதும் மேல்நோக்கு நாள்	மாலை 3.00-4.30	காலை 9.00-10.30	காலை 7.30-8.30 மதியம் 12.00-1.00 மாலை 4.30-5.30	லக்ஷ்மி நரசிம்மர் வழிபாடு உத்தமம்.	ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம்.
14-8-19 ஆடி 29 புதன்	மாலை 4.32 வரை (வ) சதுர்த்தசி பின் பௌர்ணமி	காலை 6.58 வரை உத்திராடம் பின் திருவோணம்	காலை 6.58 வரை அமிர்தயோகம் பின் சித்தயோகம்	வடக்கு, பால்.	மாலை 4.32 வரை தென்மேற்கு பின் தெற்கு	நாள் முழுவதும் மேல்நோக்கு நாள்	மதியம் 12.00-1.30	காலை 7.30-9.00	காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 2.00-3.00 மாலை 4.30-6.00	பௌர்ணமி. ஹயக்ரீவர் வழிபாடு உத்தமம்.	சுபமுகூர்த்த நாள். சுபமுயற்சிகளைச் செய்ய ஏற்ற நாள்.
15-8-19 ஆடி 30 வியாழன்	மாலை 6.11 வரை பௌர்ணமி பின் (தே) பிரதமை	காலை 9.09 வரை திருவோணம் பின் அவிட்டம்	நாள் முழுவதும் சித்தயோகம்	தெற்கு, எண்ணெய்.	மாலை 6.11 வரை தெற்கு பின் மேற்கு	நாள் முழுவதும் மேல்நோக்கு நாள்	மதியம் 1.30-3.00	காலை 6.00-7.30	காலை 7.30-9.30 10.30-11.30 மதியம் 12.00-1.30 மாலை 4.00-6.00	ஆவணி அவிட்டம்.	சுபமுயற்சிகளைச் செய்ய ஏற்ற நாள்.
16-8-19 ஆடி 31 வெள்ளி	இரவு 8.04 வரை பிரதமை பின் (தே) துவிதியை	காலை 11.34 வரை அவிட்டம் பின் சதயம்	நாள் முழுவதும் சித்தயோகம்	மேற்கு, இனிப்பு	இரவு 8.04 வரை மேற்கு பின் வடமேற்கு	நாள் முழுவதும் மேல்நோக்கு நாள்	காலை 10.30-12.00	மாலை 3.00-4.30	காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 1.00-3.00 மாலை 4.30-5.30	காயத்ரீ ஜபம். அம்மன் வழிபாடு உத்தமம்.	ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம்.
17-8-19 ஆடி 32 சனி	இரவு 10.03 வரை துவிதியை பின் (தே) திரிதியை	பகல் 2.07 வரை சதயம் பின் பூரட்டாதி	பகல் 2.07 வரை அமிர்தயோகம் பின் மரணயோகம்	கிழக்கு, தயிர்.	இரவு 10.03 வரை வடமேற்கு பின் வடகிழக்கு	பகல் 2.07 வரை மேல் நோக்கு நாள் பின் கீழ் நோக்கு நாள்	காலை 9.00-10.30	மதியம் 1.30-3.00	காலை 7.30-8.30 மதியம் 10.30-12.30 மாலை 4.30-5.30	சனிப்ரீதி உத்தமம்.	ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம்.

(வ)- வளர்பிறை; (தே)- தேய்பிறை

AUG16-RIL




நக்கீரன் பப்ளிகேஷனுக்காக நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை–600 014.–ல் அச்சிட்டு வெளியிடுபவர் : நக்கீரன்கோபால்
ஆசிரியர் : சி.சுப்பிரமணியம் பொறுப்பாசிரியர் : மலரோன்

Owned by Nakkheeran Publications, Printed and Published by **Nakkheeran Gopal**. Printed at Nakkheeran Printers and Binders, 105, Jani jahan khan road, Royapettai, Chennai-14. and Published from the same address. Phone: 43993000

Editor: **C.Subramaniam** Editor Incharge: **Malaron**

AUG16-RIL

எமது புதிய வெளியீடுகள்
பதினெண் சித்தர்கள்





ஆன்லைனில் பெற
Nakkheeran Publications.in
மற்றும்
மணியார்டர்
மூலமும் பெறலாம்

மணியார் டர் ஒரு நூலுக்கு ரூ.25/- கூடுதலான ஒவ்வொரு நூலுக்கும் ரூ.15/-

SP 76, 14- வது தெரு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர்,
சென்னை - 600058. போன் : 044 - 43993029.

t.me/Free_eMagazine
AUG16-RIL

Balajothidam-Enngal, Tamil Weekly Regd No: TN/CH(C)/11/2018-2020 RNI NO: 42635/84
Date of Publication Every Friday



ISO 9001

Astrologer Jai Guruji

ஜோதிடர் ஜெய் குருஜி



Education | Visa & Abroad | Career | Business | Marriage
Family Problems | Childless Problems | Black Magic Solutions

உங்கள் குடும்பத்தில் பிரச்சனையா? கணவன் மனைவி கருத்து வேறுபாடா? கல்வி தடையா? வருமான முடக்கம், தொழில் நட்டமா? தீராத கடன் பிரச்சனையா? புத்திர தோஷமா? வெளிநாடு முயற்சி தோல்வியா? தீராத வியாதியா? எதிரிகள் தொல்லையா? பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை பயமா? போன்ற அனைத்து விதமான வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உங்கள் ஜாதகம் மூலமும், எங்கள் குருஜியின் அருள்வாக்கு மூலமும் நிரந்தர தீர்வு காணலாம்.

உங்கள் விதியை மாற்றும் ராஜயோக தியானம்

ஜெய் குருஜி அவர்களால் தீட்சை வழங்கப்படுகிறது.

ஆரோக்கியம், செல்வம், நீண்ட ஆயுள்
தேர்வில் வெற்றி, தொழிலில் வெற்றி, மனநிம்மதி
பணியில் வெற்றி, தன்னம்பிக்கை, புகழ்
நினைத்த காரியம் வெற்றி பெற
மன உறுதியை பராமரிக்க
உள் வலிமையை அதிகரிக்க
வாழ்க்கை ஒவ்வொரு கணமும் அனுபவிக்க
அனைவரும் அறிந்திட

வர்மா சிக்ச்சை

தீராத தலைவலி, மூட்டு வலி, குதிங்கால் வலி, முதுகு வலி, முதுகு தண்டுவட வலி, இடுப்பு வலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி, மன அழுத்தம் நிவாரணம் மற்றும் உடல் சார்ந்த அனைத்து வலிகளுக்கும் நிவாரணம் அளிக்கப்படும்.

அனுபவமிக்க வர்மா சிகிச்சையாளர் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஸ்ரீ யந்திர பீடத்தில்48 நாட்கள் வைத்து பூஜிக்கப்பட்ட, சக்தியூட்டப்பட்ட பூஜைபொருட்கள், வலம்புரிச்சங்கு, வெள்ளெருக்கு விநாயகர், ஸ்ரீ சக்கரம், தனலட்சுமி டாலர், வியாபார விருத்தி யந்திரம், குபேர எண் யந்திரம், ஸ்ரீ மகாலட்சுமி யந்திரம், சுதர்சன யந்திரம், வாஸ்து யந்திரம், ஸ்ரீலட்சுமி குபேர யந்திரம் - செல்வ வளம், அதிர்ஷ்டம், சகல சௌகர்யங்களையும் அளிக்க வல்லது. ஸ்ரீ லக்ஷ்மி குபேர கலசம் - லக்ஷ்மி கடாக்ஷம் பெற, கண்திருஷ்டி யந்திரம் - எதிர்கள் தொல்லை, கண்திருஷ்டி, போட்டி பொறாமைகள் விலக. நவகிரக யந்திரம் - நவகிரக தோஷம் நீக்கும், காரிய தடை விலகும், சந்தோஷம் நிலைக்க. ஜன வசிய இரட்சை - ஜன வசியம், காரியசித்தி உண்டாக. சகலசித்தி வசிய திலகம் - நெற்றியில் திலகமிட்டு செய்யும் காரியம் ஜெயமாகும். சரஸ்வதி யந்திரம் / திலகம் - படிப்பில் முன்னேற்றம் ஏற்படுத்தவும், எவ்வளவு படித்தாலும் வெற்றி பெற இயலாத நிலையில் உள்ளவர்களும் இதனை உபயோகிக்கலாம்.

Privacy Guaranteed | Personal Consultation | Telephone Consultation

Call us

Cell: 8870263763, 9952442976

AGATHIYAR ASTRO RESEARCH CENTRE

42/33, Rutha Complex, Subramaniapuram, Srirangam, Trichy - 6. www.agathiyarastro.org